விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 22 வியாழக்கிழமை (06.03.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 77

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் சந்திப்பு

# தலைவர் பிரபாவின் உத்தரவில்

# படைக் கைதிகள் இருவர் விடுதலை!

## நல்லெண்ண நடவடிக்கையெனத் தெரிவிப்பு



(கிளிநொச்சி நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிவ்ஸன், ஓய்வுபெற்றுச் செல்லும் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்பியூறு ஹெவ்டே ஆகிய இருவரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.**

**இச் சந்திப்பை அடுத்து நல்லெண்ண மனிதாபிமான அடிப்படையில் தலைவர் பிரபாவின் விசேட பணிப்புரைக்கு அமைவாக தமிழீழ நீதிமன்றினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய் மற்றும் பொலிஸ் அதிகாரி ஆகிய இருவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட்டனர்.**

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பெரும் இழுபறி நிலையை ஏற்படுத்தியிருந்த கைதிகளின் விடுதலை விவகாரம் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற சந்திப்பை அடுத்து முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிவ்ஸன் மற்றும் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்பியூறு ஹெவ்டே ஆகிய இருவரும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து பேச்சு நடத்துவதற்காக நேற்றுக் காலை விமானப்படையின் உலங்கு வானூர்தியில் கிளிநொச்சியை சென்றடைந்தனர்.

அங்கு அவர்களுக்கு புலிகளின் பிரமுகர்களால் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சியில் உள்ள அரசியல் துறை நடுவச் செயலகத்தில் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர்கள் இருவரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.



இச் சந்திப்பு நண்பகல் ஒரு மணிவரை நீடித்தது. இச் சந்திப்பின் போதே ஸ்ரீலங்கா படைத்தரப்பின் இராணுவச் சிப்பாய் மற்றும் பொலிஸ்

(10ம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர்கள் 80 பேர் நேற்று நீதிமன்றால் விடுதலை

### 21பேருக்கு தொடர்ந்து விளக்கமறியல்

(மன்னார்)

மன்னார்க் கடற் பரப்பில் அத்து மீறி நுழைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது மன்னார் மீனவர்களால் பிடிக்கப்பட்ட 118 இந்திய மீனவர்களில் 80 பேர் விடுதலை செய்யப்பட்டனர். 21 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னர்க் கடற் பரப்பில் பிடிக்கப்பட்ட மீனவர்களில் காயமடைந்த 17 மீனவர்களைத் தவிர ஏனைய மீனவர்கள் அனைவரும் நேற்று மன்னார் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர். இதன்போது விடுதலை செய்யப்பட்ட மீனவர்களைத் தவிர ஏனைய 21 பேரையும் எதிர்வரும் 20ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

காயமடைந்த மீனவர்களில் 16 பேர் மன்னார் வைத்தியசாலையிலும் ஒருவர் அனுராதபுரம்

(10ம்பக்கம் பார்க்க)

## தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் இழுபறி

# வட- கிழக்கு பாடசாலைகளில்

# 11ம் திகதி பூரண பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கில் உள்ள தொணடர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாமைக்கு எதிர்ப்பும்,கண்டனமும் தெரிவித்து எதிர்வரும் 11ம் திகதி வடக்குக் கிழக்கில் உள்ள அனைத்துப் பாடசாலைகளினதும் கல்விச் செயற்பாட்டை ஸ்தம்பிக்கச் செய்யும் வகையில் பகிஷ்கரிப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் வடக்குக் கிழக்கல் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பேரணி நடத்துவதற்கான ஏற்பாடுகளும்செய்யப்படுகின்றன.

பேரணியாக மாவட்டச் செயலகங்களுகக்குச் சென்று அரச அதிபர்கள் ஊடாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு மகஜர் கையளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.


தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் வகையில் அண்மையில் பொதுச் சேவை ஆணைக்குழு 917பேரை தெரிவு செய்திருந்தது.

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகள் சுதந்திரமாக நடமாட்டம்

# அப்பாவி மக்கள் சிறைகளில் முடக்கம்

## நியாயமற்ற செயல் என்கிறார் தமிழ்ச்செல்வன்



(கொழும்பு)

தொடர்ந்தும் தடுத்து வைத்திருப்பது மிகவும் மோசமான மனிதவுரிமை மீறல்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

நேற்று தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் அதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; சமாதானப் பேச்சுவார்த்தையின் போது தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலை குறித்து நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் அப்பாவி மக்கள் அவ்வாறு அவர்களைத் தடுத்து வைத்திருப்பது நியாயமற்றது.

இதில் விசேடம் என்னவெனில் பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது விடுதலைப் புலிகளுக்கு எதிராக, ஆனால் விடுதலைப் புலிகள் தற்பொழுது சுதந்திரமாக அரசியல் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள்


(10ம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாநகர சபைக்கு வான் அன்பளிப்பு


(கொழும்பு)

குருநாகல் மாநகர முதல்வரினால் யாழ். மாநகர சபைக்கு வான் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது. மாநகர முதல்வர்களின் ஒன்றியக் கூட்டத்தில் யாழ் மாநகர முன்னாள் முதல்வர் செ.கந்தையன் ஏற்கனவே விடுத்த கோரிக்கையை அடுத்தே குருநாகல் மாநகர முதல்வர் வானை அன்பளிப்பாக வழங்க முன் வந்துள்ளார். எதிர்வரும் 10ம் திகதி வான் கையளிக்கப்படும்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





# CRICKET WORLD CUP 2003




## சுப்பர் சிக்ஸ் போட்டிகள்

| | | | |
|---|---|---|---|
| மார்ச் 7 | அவுஸ்திரேலியா எதிர் இலங்கை | ஈஸ்றலண்டன் | 2.PM |
| மார்ச் 7 | இந்தியா எதிர் கென்யா | கேப்டவுன் | 6.PM |
| மார்ச் 8 | சிம்பாப்வே எதிர் நியூசிலாந்து | ப்ளூம் பொன்டேன் | 2.PM |
| மார்ச் 10 | இந்தியா எதிர் இலங்கை | ஜோகனஸ் பார்க் | 2.PM |
| மார்ச் 11 | அவுஸ்திரேலியா எதிர் நியூசிலாந்து | போர்ட் எலிசபத் | 2.PM |
| மார்ச் 12 | சிம்பாப்வே எதிர் கென்யா | ப்ளூம் பொன்டேன் | 2.PM |
| மார்ச் 14 | இந்தியா எதிர் நியூசிலாந்து | செஞ்சூரியன் | 2.PM |
| மார்ச் 15 | சிம்பாப்வே எதிர் இலங்கை | ஈஸ்றலண்டன் | 2.PM |
| மார்ச் 15 | அவுஸ்திரேலியா எதிர் கென்யா | டர்பன் | 6.PM |

## இங்கிலாந்து அணித் தலைவர் நஸீர் குசைன் இராஜினாமா

உலக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் அனிஷ் நெக்ராவின் பந்து வீச்சால் துவண்டு இந்திய அணியிடம் கண்ட தோல்விக்கும், அவுஸ்திரேலிய அணியுடன் இலகுவாக வெல்ல வேண்டிய ஆட்டத்தில் பெற்ற தோல்விக்கும், சிம்பாப்வே அணியுடனான ஆட்டத்தில் பங்குபற்றாமைக்கும் பொறுப்பேற்று இங்கிலாந்து அணித்தலைவர் நஸீர் குசைன் தனது அணித் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவின் போட் எலிசபேத்தில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்படி இராஜினாமாவை குசைன் அறிவித்தார். ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் அணித்தலைவர் பதவியை இராஜினாமாச் செய்தாலும், அணியின் நலனுக்காக ரெஸ்ற் போட்டிகளில் அணித் தலைமைப் பொறுப்பை ஏற்று அணியை வழிநடத்துவேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

பிரிவு ஏ யில் அவுஸ்திரேலியா, இந்தியா, சிம்பாப்வே ஆகிய அணிகள் சுப்பர் சிக்ஸ்க்கு முன்னேறிய நிலையில் இங்கிலாந்து



பாகிஸ்தான் அணிகள் சுற்றுப் போட்டியிலிருந்து வெளியேறியுள்ளன. இச் சுற்றுப் போட்டியில் இங்கிலாந்து அணித்தலைவர் நஸீர் குசைன் சிறப்பாக துடுப்பெடுத்தாடவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. அவர் ச்ராாசரியாக 8 ஓட்டங்களையே பெற்றிருந்தார். இச் சுற்றுப் போட்டியில் சுப்பர் சிக்ஸ்க்கு இங்கிலாந்து அணி தகுதி பெறாமையினாலும், இளம் வீரர் ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்கும் முகமாகவுமே தான் அணித் தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொள்வதாக குசைன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிரிவு ஏ யில் இடம்பெற்ற பாகிஸ்தான் சிம்பாப்வே அணிகளுக்கிடையேயான போட்டியில் மழை குறுக்கிட்டதால் இரு அணிகளுக்கும் தலா 2 புள்ளிகள் வழங்கப்பட்டது. இதனால் சிம்பாப்வே அணி சுப்பர் சிக்ஸ்க்குள் முன்னேறியுள்ளது. இப் போட்டியில் சிம்பாப்வே அணி தோல்வியுற்றிருந்தால் இங்கிலாந்து அணி சராசரி ஓட்ட வீதப்படி சுப்பர் சிக்ஸ்க்கு முன்னேறியிருக்க முடியும். (த-55)

## பயிற்சியில் ஈடுபட ஷேன் வோனுக்கு அனுமதி

ஒருவருடகாலப் போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ள் அவுஸ்திரேலிய அணியின் சுழல் பந்து வீச்சாளர் ஷேன் வோன் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அவரின் பிரதேச அணியான விக்டோரியா விளையாட்டுக் கழகத்தில் அவரை பயிற்சியில் ஈடுபட அனுமதியளிப்பதாக அணியின் பயிற்றுவிப்பாளர் டேவிட் குட்ஸ் தெரிவித்துள்ளார்.

இவரது பயிற்சிகள் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் வரை போட்டிகளில் விளையாடும் வகையில் இடம்பெற்றிருக்க வேண்டும் என்றும் டேவிட் குட்ஸ் தெரிவித்துள்ளார். எந்தவித பயிற்சிகளும் இன்றி அவரைத் தடுத்துவைப்பது அவருக்கு பேரிழப்பை ஏற்படுத்தும் இதனால் அதனை அனுமதிக்க முடியாது எனவும் அவர் கூறியுள்ளார். (த-5)




## நடிகை நக்மா வீசும் பந்துகளை கங்குலி எதிர்கொள்வாரா?

இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலியுடன் தனக்கிருந்த இரகசிய உறவை பிரபல திரைப்பட நடிகை நக்மா வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ளார். கடந்த சில வருடங்களாக பத்திரிகைகளில் பரபரப்பாக எழுதப்பட்ட கங்குலி-நக்மா விவகாரம், தற்சமயம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. அவர்கள் இருவரும் தங்களுக்கிடையில் இருந்த உறவை நீண்டகாலமாக மறுத்து வந்தனர். ஆனால் அவுஸ்திரேலிய அணி இந்தியாவில் கிரிக்கெற் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த வேளையில், இருவரும் திருப்பதியில் உள்ள காளஹஸ்தி கோயிலுக்கு ஜோடியாகச் சென்று சாமி தரிசனம் பெற்றிருந்ததாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

"சேவ்வீ" என்னும் பெண்கள் இதழ் ஒன்றிற்கு நக்மா அளித்துள்ள பேட்டியில், "நாம் இருவரும் அவரவர் துறைகளில் தொடர்ந்து முன்னேறுவதற்காகவே எமக்கிடையே இருந்த உறவை மறுத்து வந்தோம். நமது சாதாரண ஆசைகளை பெரிய இலட்சியங்களுக்காக தியாகம் செய்யவேண்டியுள்ளது. இந்திய ரசிகர்கள் ஒருபோதும் வெற்றி,தோல்வியை எண்ணி உணர்ச்சி வசப்படக்கூடாது என்று தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் கங்குலி தலைமையிலான அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றும் கனவில் உள்ள இவ் வேளையில் நக்மாவின் பேட்டி கங்குலியின் தனிப்பட்ட வாழ்க்கையிலும், அவரது ஆட்டத் திறனிலும் பாதிப்பை ஏற்படுத்துமா? என்ற அச்சம் எழுந்துள்ளது. ஆடுகளத்தில் எதிரணி வீரர்களின் பந்துகளைச் சமாளிகும் கங்குலி நக்மா வீசுகின்ற பந்தினை எப்படிச் சாமாளிக்கப் போகிறார். (த-55)



இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்துடன்
இணைந்து
**வலம்புரி**
நடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப்போட்டி

**போட்டியில் பங்கு பற்றுங்கள்
பெறுமதியான பரிசை வெற்றி
கொள்ளுங்கள்**

1) இம்முறை உலகக்கிண்ணத்தை வெல்லும் அணி எது?

2) இப் போட்டியின் சகலதுறை ஆட்டக்காரர் யார்?

**உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**
**கிரிக்கெற் பரிசுப் போட்டி**
**வலம்புரி**
இல 15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

**உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003**

முழுப்பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

தே.அ.அ.இல : ..............................

கையொப்பம்: ..............................

**அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி**
**மார்ச் 15, 2003**

# சமாதானம் என்ற போர்வையில் பிரபாவின் கரம் பலப்படுத்தப்படுகிறது

## ரணில் அரசு மீது சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

திறமையற்ற தலைவர்களை விரட்டிவிட்டு தேசப்பற்று மிக்க மக்கள் யாவரும் ஒரு தலைமையின் கீழ் ஒற்றுமையாக அணிதிரள வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பண்டாரவளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

அந்தக் கூட்டத்தில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி,

பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முன்னேறுவதாகப் பேச்சுவார்த் தைக் குழுத் தலைவர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிக்கிறார்.

ஆனால், தாம் வடக்கு-கிழக்கின் உடனடி மனிதாபிமானத் தேவைகள் பற்றியே பேசுவதாக பிரதமர் என்னிடம் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் ஐரோப்பாவில் கருத்து வெளியிட்ட புலிகளின் பேச்சுவார்த் தைக் குழுத்தலைவர் அன்ரன் பாலசிங்கமோ வேறு விதமாக கூறுகிறார்.

தமது படையினருக்கு சிறிது காலம் ஓய்வு கொடுப்பதற்காக போர் நிறுத்தம் செய்திருப்பதாக அவர் தெரிவித்தி ருக்கிறார்.

இதனால் எதிரியின் உண்மையான நிலைப்பாட்டை அறியாமல் போர் ஒன்றில் ஈடுபட முடியாது என்று குறிப்பிட்டார்.

மேலும் சுதந்திரம் பெற்ற பின்னர் 53 வருடங்களில் நாடு பெரும் குழப்பங்களைக்கண்டுள்ளது. 1983 ஆம் ஆண்டு தமிழர்கள் நியாய மற்ற வகையில் துன்புறுத்தல் களுக் குள்ளாயினர். அன்று விடப்பட்ட தவறு இரண்டு தசாப்த காலமாக நாட்டைப் பயங்கர யுத்தத்தினுள் தள்ளி விட்டது.

இன்றைய அரசு சமாதானம் என்ற போர்வையில் கடந்த ஒரு வருட மாக புலிகளின் தலைவர் பிரபாகர னின் கரங்களைப் பலப்படுத்தி வருகின்றது. பிரபாகரன் எந்த நேரத் திலும் யுத்தத்தை தொடங்குவதற்கு ஏதேனும் ஒரு சாட்டை முன்வைக் கக் கூடும் என்பதே தனக்குள்ள பயம் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ)



## வேலணையில் மகளிர் சேமிப்புத் திட்டம்

(வேலணை)

எதிர்வரும் 8 ஆந்திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு வேலணை கிழக்கு மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவுடன் சேமிப்புத் திட்டமொன்றை ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக்கிளையினர் வேலணையில் மேற்கொள்ளவுள்ளனர். (உ-4)

## விளையாட்டுப் போட்டி

(அளவெட்டி)

தெல்லிப்பளை கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 9 ஆம் திகதி வரை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (உ-83)

# கைவிடப்பட்ட காவலரண்கள் இனந்தெரியாதோரால் தீக்கிரை

(வவுனியா)

வவுனியா-மன்னார் வீதியின் குழுவாட்டுச் சந்தியில் அமைக்கப் பட்டிருந்த பொலிஸ் காவலரண்கள் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் தாக்கியழிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இக்காவலரண்களில் பொலிஸார் கடமையில் இல்லாத வேளையிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

அரசாங்கத்துக்கும், தமிழீ விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், சமாதானச் சூழல் காரணமாக சில காவலரண்களில் பொலிஸார் கடமைகளில் ஈடுபடுவதில்லை.

இவ்வாறு கைவிடப்பட்ட பொலிஸ் காவலரண்களே தீக்கிரையாக்கப்பட்டுள்ளன எனவும், இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (உ-8)

## புலிகளின் அரசியல் ஆலோசகர்

# அன்ரன் பாலசிங்கம் மட்டக்களப்பு செல்வார்

தற்போது வன்னியில் தங்கியுள்ள விடுதலை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் விரைவில் மட்டக்களப்பு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்ட புலிகளின் தலைமையகம் அன்ரன் பாலசிங்கத்தை அங்கு வருமாறு வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் பிரமுகர்களைச் சந்தித்து சமாதான முயற்சிகள் மற்றும் புலிகளின் நிலைப்பாடு தொடர்பாக விளக்கமளிக்கவும், விடுதலைப் புலிகளின் பிராந்திய மூத்த தளபதிகளைச் சந்திக்கவும் இவர் ஆவல் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

# பாடநூல்கள் வழங்கப்படவில்லை

## படிப்பில் மாணவர் பின்னடைவு

(அளவெட்டி)

முதலாம் தவணை முடிவுறும் தறுவாயிலும் குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பாடநூல்கள் இன்னமும் முழுமையாக வழங்கப்படவில்லை.

இதனால் மாணவர்கள் கற்றலில் பெரும் பின்னடைவை எதிர் கொண்டுள்ளனர்.

தரைவழிப்பாதை திறக்கப்பட்டும் கூட பாடநூல்களை எடுத்து வருவதில் ஏன் இந்தத் தாமதம் என பெற்றோர் தரப்பில் வினா எழுப்பப் பட்டுள்ளது. (உ-83)

## தரம் 08 மாணவர்களுக்கான

# கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டி

பரிசில்கள்

1ஆம் பரிசு ரூபா 500
2ஆம் பரிசு ரூபா 250
3ஆம் பரிசு ரூபா 150

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

*நாயன்மார்கட்டு **அமரர் இராமலிங்கம் இராசையா** அவர்கள் ஞாபகார்த்தமாகப் பரிசில்கள் வழங்கப்படும்.

## போட்டியின் விதிகள்

**தரம் எட்டில்** இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* **கட்டுரையின் தலைப்பு :** ‘‘எனக்குச் சிறகு முளைத்தால்’’
* கட்டுரை 150 தொடக்கம் 175 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப் பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.03.2003 ற்கு முன்னதாக ‘‘மாணவர் கட்டுரைப் போட்டி’’ வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

## இணைக்கும் பத்திரம்

## கட்டுரைப் போட்டி இல-3

மாணவர் முழுப் பெயர் :---------------------------------
பாடசாலை :---------------------------------
கற்கும் தரம் :---------------------------------

**உறுதிப்படுத்துகிறேன்**

---------------------
ஆசிரியர்

## காயமடைந்த

# இந்திய மீனவர்கள் 17 பேரும் இராமநாதபுரத்தவர்களாம்

(மன்னார்)

கடந்த திங்களன்று மன்னார்க் கடலில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த இந்திய மீனவர்களுக்கும் மன்னார் மீனவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் காயமுற்று மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள 17 இந்திய மீனவர்களும் இராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

அநாகராஜா (வயது 36), அநாகேந்திரம் (வயது 32), ச.செந்தில் (வயது 20), சி.முருகன் (வயது 33), பி.பாலு (வயது 47), எம்.முருகன் (வயது 22), பி.சேகராஜ் (வயது 24), அ.சந்திரசேகர் (வயது 32), பி.முருகானந்தன் (வயது 32), ச.முருகன் (வயது 32), ந.ஜனார்த்தனன் (வயது 30), அ.இராமச்சந் திரன் (வயது 31), ரி.ஜனகன் (வயது 26), அ.செந்தில் (வயது 45), எஸ்.செட்டிக்குட்டி (வயது 31), எஸ்.முருகவேல் (வயது 31), அ.சந்திர வேல் (வயது 22) ஆகியோரே மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (உ)

# தொண்டர் ஆசிரியர்கள் உண்ணாவிரதமிருக்க முடிவு

(கொழும்பு)

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போவதாக தொண்டர் ஆசிரியர்கள் அறிவித்துள்ளனர்.

நிரந்தர நியமனம் கோரி கடந்த முதலாம் திகதி முதல் இத் தொண்டர் ஆசிரியர்கள் வடக்கு-கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு அலுவலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது சம்பந்தமான உத்தரவாதம் எழுத்து மூலம் தரப்படும் வரை இப் போராட்டம் தொடரும் என மேற்படி தொண்டர் ஆசிரியர்கள் சார்பாக சங்கச் செயலாளர் எஸ்.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இப்போராட்டம் நேற்றும் ஐந்தாவது நாளாக மாகாண கல்வி அமைச்சுக்கு முன்னால் தொடர்ந்தது. (உ-8)

## பேராதனை சத்திரசிகிச்சைக் குழு

# யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை மேற்கொள்ளும்

(யாழ்ப்பாணம்)

உதடு, வாய், அண்ணம் முதலியவற்றில் ஏற்படும் பிறப்புக் குறைபாட்டை சீர் செய்வதற்கான சத்திர சிகிச்சைக் குழுவொன்று எதிர்வரும் 10 ஆம் திகதி பேராதனையில் இருந்து யாழ் போதனாவைத்திய சாலைக்கு வருகைதரவுள்ளது.

எனவே இச்சத்திர சிகிச்சைக் காகப் பதிவு செய்தவர்களும் புதிதாக பதிவு செய்துகொள்பவர்களும் 10 ஆம் திகதியன்று காலை 8 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள பற்சிகிச்சைப் பிரிவிற்கு வருமாறு பற்சிகிச்சைப் பிரிவின் பொறுப் பதிகாரி கேட்டுள்ளார். (உ-10)

## இந்து மாநாட்டை ஒட்டிய போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

இரண்டாம் உலக இந்து மாநாடு தொடர்பாக இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்படும் பண்ணிசை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளுக்கு இதுவரை விண்ணப்பித்தவர்கள் தங்கள் பாடசாலைகளின் அதிபருக்கூடாக விண்ணப்பங்களை எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக சிவ மகாலிங்கம் உதவிக்கல்விப்பணிப்பாளர், இந்து சமய விவகார அலுவலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (உ)

## உப்பில் உறைந்த உதிரங்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நிதர்சனம் மகளிர் பிரிவின் தயாரிப்பில் உருவான ‘‘உப்பில் உறைந்த உதிரங்கள்’’ என்ற முழு நீளத் திரைப்படம் சர்வதேச மகளிர் தினமான இம்மாதம் 8 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

கடற்புலிகளின் ஆதரவில் தயாரிக்கப்பட்ட இப்படத்தைக் குயிலினி இயக்கியுள்ளார்.

கடற்புலிகளுக்குச் சமர்ப்பணமாக தயாரிக்கப்பட்டுள்ள இத்திரைப்படம் வெளியிடப்படும் அன்றைய தினமே திரையிடப்படவுள்ளது: (உ)

## வானியற் பாசறை

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியில் தரம் 9 வகுப்பில் விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் கற்கும் மாணவர்களுக்கு வானியற் பாசறை உடுத்தொகுதி அவதானிப்பு கள நிகழ்வு இன்று இரவு நடைபெறவுள்ளதாகவும் சகல மாணவர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறும் அதிபர் கேட்டுள்ளார். (உ)

## இலவச வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரால் ‘‘பன்னிரு திருமுறை தோத்திரம்’’ என்ற நூல் கடந்த சிவராத்திரி தினத்தன்று யாழ். சத்திரத்து ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானத்தில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நூல் தேவைப்படுவோர் மன்ற அலுவலகத்தில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. (உ-10)

## 12 அடிநீள வெங்கணாந்திப் பாம்பு பிடிபட்டது

(கொழும்புத்துறை)

12 அடி நீளமான வெங்கணாந்திப் பாம்பு ஒன்றை கொழும்புத்துறை ஆனந்தன் வடலிவீதி வாசிகள் அண்மையில் பிடித்துள்ளனர்.

இப்பாம்பை வாகனம் ஒன்றில் ஏற்றி மக்கள் பார்வையிடுவதற்காக பல இடங்களுக்கும் கொண்டு சென்றமையையும் அவதானிக்க முடிந்தது. (உ-51)

## சட்டங்களில் பெண்களுக்கு அநீதி

(கொழும்பு)

நாட்டில் உள்ள சில சட்டங்கள் பெண்களுக்கு அநீதி விளைவிக்கும் வகையில் அமைந்துள்ளன என சட்டத்தரணி டிரானி ராஜபக்ஷா தெரிவித்துள்ளார்.

பெண்களுக்கு அநீதி விளைவிக்கப்படும் சட்டங்களுக்கு உதாரணங்களாக வடபகுதி தேச வழமைச்சட்டத்தையும், மலைநாட்டுச் சட்டத்தையும் இவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பதவிஉயர்வுகள், நியமனங்கள், சம்பள முரண்பாடுகள் ஆகியவற்றிலும் பெண்கள் உதாசீனம் செய்யப்படுகின்றார்கள்.

தொழில் புரியும் பெண்கள் தொடர்பாக விசேட சட்டங்கள் எவையும் இல்லாவிட்டாலும், பொது. தொழிற் சட்டங்களின் அடிப்படையிலேயே அவர்களின் நலன்கள் பாதுகாக்கப் படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்


(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டுப் பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுடனான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை பிப 1 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-7)

# அமெரிக்காவின் சகல சவால்களுக்கும் முகம்கொடுக்க ஈராக் தயார்

## சதாம் ஹுசைன் அறிவிப்பு

(பக்தாத்)



அமெரிக்காவின் எல்லாவித சவால்களிற்கும் முகம் கொடுக்க ஈராக் தயாராக உள்ளதுடன் அந்த சவால்கள் வெற்றிகரமாக முறியடிககப்படும் என்றும் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

ஈராக் ஜனாதிபதி தனது உரையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் இந்த நூற்றாண்டில் பிறந்த கொடூரமான மனிதர் என்று கூறியுள்ளார்.

அத்துடன் ஜோர்ஜ்டபிள்யு புஷ்ஷை அழிப்பதற்கு ஈராக் மக்கள் துணி வுடன் ஆயுதங்களைக்கையில் எடுக்க வேண்டும் என்றும் சாதம் கூறியுள்ளார்.

சாத்தானின் அனுக்கிரகத்தினாலே அமெரிக்க ஜனாதிபதி உலகை ஆள முயல்வதாகவும் சதாம் ஹுசைன மேலும் தெரிவித்துள்ளார்.

### பெல்ஜியத்தின் கருத்து

ஐ.நா அமைப்பின் ஆயுத சோதனை யாளர்களிற்கு ஈராக்முழுமையான ஒத்து ழைப்பை வழங்குவதுடன் ஆயுதக்களை வினையும் மேற்கொண்டால் யுத்தம் ஒன்று ஏற்படுவதைத்தவிர்க்க முடியும என பெல்ஜியம் தெரிவித்துள்ளது.

பெல்ஜியத்தின் வெளிவிவகார அமைச்சர் லொய்ஸ் மிக்கேல் இது தொடர்பாக அறிக்கை ஒன்றினை விடுத்துள்ளார்.

ஐ.நா அமைப்பின்சட்டதிட்டங்களிற்கு அமைய தனது நடவடிக்கைகள் இடம் பெறுவதை ஈராக் தெளிவாக விளக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் பெல்ஜிய வெளிவிவகார அமைச்சர் கோரியுள்ளார். (பி-9)



தென் பிலிப்பைன்ஸ் நகரான டாலாலோவில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற குண்வெடிப்பில காயமுற்ற சிறுவனுக்கு சிகிச்சையளிக்கப்டுகிறது.



ஈராக் மீது போர் ஏற்படும் சூழ்நிலையை அடுத்து சான்டியாகோ கடற்படைத் தளத்திலிருந்து மத்திய கிழக்குப் பகுதிக்குப் புறப்படும் முன் திங்கள்கிழமை மனைவி அமண்டாவுக்கு முத்தமிட்டு விடைபெறுகிறார் அமெரிக்க வீரர் மாத்யூ கேமெரி (வலது). இதே கப்பலில் செல்லும் கணவரை வழியனுப்பிவிட்டு கதறும் அமைகேலுக்கு ஆறுதல் கூறுகிறார் தோழி ஆன் ஹெர்னாண்டஸ் (இடது).

# தீர்மானத்துக்கு 9நாடுகளின் ஆதரவுகிடைத்தால் போதும்

## 'வீட்டோ' பற்றி புஷ் கவலைப்படவில்லை

(வாஷிங்டன்)

அமெரிக்காவும் பிரிட்டனும் ஈராக் மீது போர் தொடுப்பதற்கான ஐ.நா.பாதுகாப்புச் சபையின் அங்கீகரத்தைப் பெறும் வகையில் தாக்கல் செய்துள்ள தீர்மானத்திற்கு உறுப்புநாடுகளின் ஆதரவுகளை பெற்றுக் கொள்ள மேற்படி இரு நாடுகளும் தீவிரமுயற்சியில் ஈடுபட்டுள்ள அதேவேளை ஈராக் விடயத்தில் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவது பற்றி ஐ.நா செலயலளார் நாயகம் கோபிஅனான் கருத்து வெளியிட்டுள்ளார்.

வாக்களிப்பென்று வந்தால் தீர் மானத்துக்கு ஆதரவு மேலும் அதிக உறுப்புநாடுகளை எங்களால் இணங்க வைக்க முடியும்மென்று நம்புகின்றோம் என அமெரிக்க இராஜங்க அமைச்சர் கொலின்பவல் தெரிவித்துள்ளார்.


பிரான்ஸ் 2என்ற தொலைக் காட்சி நிகழ்ச்சிக்கு பவல் பேட்டிக்கு அளித்துள்ளார்.

15 உறுப்பினர்களைக் கொண்ட பாதுகாப்புச் சபையில் தீர்மானம் நிறைவேறுவதற்கு 9 உறுப்பு நாடுகள் ஆதரவளிக்கவேண்டும். பிரான்ஸ், ரஷ்யா தங்கள் 'வீட்ரோ' (சரத்து) அதிகாரங்களை பிரயோக் கிக்கூடிய சாத்தியக்கூறுகள் அதி கரித்துள்ளன.

தீர்மான வாக்கெடுப்புக்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப் படவில்லை பெரும்பாலும் இது அடுத்த வாரம் இடம்பெறலாம் கடந்த செவ்வாய் அன்று லண்டன் வந்திருந்த ரஷ்ய வெளிநாட்டு அமைச்சர் இக்கோர் இவானோவ் பத்திரிகையாளர்களிடம் பேசுகை யில் ரஷ்யா வாக்கிளிப்பிலிருந்து ஒதுங்கியிருக்கப் போவதில்லை எமது 'வீட்டோ' அதிகாரத்தைச் செய்யவேண்டியும் ஏற்படலாம் என்றார். தீர்மானத்துக் எப்படியும் 9 வாக்குகளைப்பெற்றுவிடவேண்டும் என்பதே அமெரிக்காவின் இப்போ தைய நிலைப்பாடாகத் தெரிகின்றது அவ்வாறான நிலையில் பிரான்ஸ, ரஷ்யா, சனா நாடுகள் தமது 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத் தினாலும் அமெரிக்காவுக்கும் கவலை இருக்காது 9வாக்குகள் ஆதரவு இல்லை எனின் அமெரிக்காவின தீர்மானத்தை வாபஸ் பெற்றுவிடும்.

அதிபர்ஜோர்ஜ் டபிள்யு புஷ்சை பொறுத்தவரை புதிய தீர்மானம் நிறைவேறினாலும் நிறைவேறா விட்டாலும் போரைத் தொடங்குவ தற்கு தமக்கு அதிகாரம் இருப்பதா கவே கருதுகின்றார். ஈராக்கில் எல்லைகளில் 2லட்சத்து 50ஆயிரம் யு. எஸ் படைகள் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன. பிரிட்டன் போன்ற நாடு களை பொறுத்தவரை கடுமையான உள்நாட்டு எதிர்ப்புக்களை சமளிப் பதற்கு ஐ.நா. தீர்மானம் நிறை வேற்றப்படுவது அவசியம் என்று கருதுகின்றன.

பிரான்ஸ், ரஷ்யா, சீனா, ஜேர்மனி, சிரியா போன்ற நாடுகள் தீர்மானத்தை எதிர்க்கவிருக்கின்றன பிரிட்டன், ஸ்பெயின் தீர்மானத்தை இணைந்து முன்மொழிந்துள்ளன



பல்கேரியாவும் ஆதரரிக்கக்கூடும்.

சிலி,மெஸ்ஸிக்கோ, பாகிஸ்தான், அங்கோலா, சிலி, கமரூன் ஆகியவை இன்னுமொரு தீர்மானத்திற்கு வரவில்லை அங்கோல, பாகிஸ் தான், மெஸிக்கோ ஆகியவை அமெரிக்காவுக்கு சார்பாக நிற்க முடிவு செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐ.நா.செயலாளர் நாயகம் தமது பாதுகாப்பு சபை உறுப்பினர் களுக்கான வழமையான மாதாந்த விருந்தில் பேசும்போது பிரதான வல்லரசு நாடுகள் தமக்குள்ஒரு இணக்கப்பாட்டுக்குள் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

யுத்தமானது மக்களை அளிக் கும் ஒரு செயற்பாடாகும். எல்லா முயற்சிகளும் தோல்வி கண்டபின் னரே யுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அனான் பத்திரிகை யாளர்களிடம் கூறினார். (பி)

## —— காலித்துடன் தொடர்பு ——

# பாக். இராணுவ அதிகாரி கைது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கைது செய்யப் பட்ட அல்-கெய்டா தீவிரவாத அமைப்பின் முக்கிய தலைவர் களில் ஒருவரான காலித் ஷேக் முஹம்மதுவுடன் தொடர்பு வைத்திருந் ததாக பாகிஸ்தான் இராணுவ அதிகாரி ஒருவர் கைது செய்யப் பட்டார்.

சில தினங்களுக்கு முன்பு காலித்துடன் கைது செய்யப்பட்ட உள்ளூர் வாசியான அஹமது குத்தூஸின் மாமாதான் கைது செய்யப் பட்ட இராணுவ மேஜர் அடில் குத்தூஸ் கோகட் கன்டேன்மெண்ட் பகுதியில் வசித்துவந்த குத்தூஸுக்கு அவரது மருமகனுடன்தொடர்பு இருந்ததா என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ராவல் பிண்டியிலுள்ள ஜமாத் இஸ்லாமிய அமைப்பின் தலைவர் அப்துல் குத்தூஸ் வீட்டில் காலித் கைது செய்யப்பட்டார். (பி)

WORLD NEWS உலக தரிசனம்

# பிலிப்பைன்ஸ் விமான நிலைய குண்டு வெடிப்பில; 30பேர் பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸில்தாவோ என்கிற நகரத்தில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் பய ணிகள் கூட்டம் நிரம்பி வழிந்தது. பல வெளிநாட்டு மற்றும் உள் நாட்டு விமா னங்கள் வந்து சென்று கொண்டிருந்தன.

விமானநிலையத்தில் பயணிகள் ஓய்வு அறையில் வைக்கப் பட்டிருந்த ஒரு குண்டு திடீரென்று வெடித்தது. இதனால் அங்கு பெரும் பரபரப்பும பீதியும் ஏற்பட்டது. மக்கள் தங்கள் உயிரைக்காப்பாற்றிக் கொள்வதற் காக விமான நிலையத்தில் இருந்து தலை தெறிக்க தப்பி ஓடினார்கள்.

இந்தக் குண்டு வெடிப்பில் அமெரிக்கா வைச் சேர்ந்த ஒருவர் உட்பட 30பேர் பரிதாபமாக உயிர் இழந்தனர். 100பேர் காயமடைந்தனர். இவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். காயமடைந்தவர் களில் 20பேரின் உடல் நிலைகவலைக் கிடமாக உள்ளது. (பி)




பிலிப்பைன்ஸ் குண்டு வெடிப்பில் தகர்க்கப்பட்ட பயணிகள் ஓய்வு அறையை மீட்புக்குழுவினர் பார்வையிடும் காட்சி

## ஓமன் நாட்டில் முதல் முறையாக பெண் அமைச்சர்

(மஸ்கட்)

ஓமன் நாட்டில் முதன் முறையாக ஒரு பெண் அமைச்சரவையில் சேர்க கப்பட்டுள்ளர். ஹேக் ஆய்ஷா பிந்த் (30) என்பவரை அந்த நாட்டின் முதல் பெண் அமைச்சராக நியமித்து ஓமன் மன்னர்சுல்தான் காபூஸ் திங்கட் கிழமை உத்தரவு பிறப்பித்தார். தேசிய கைவினைப் பொருள் தொழில்துறை ஆணையகத்தின் அமைச்சராக நிய மிக்கப்பட்டுள்ள ஹேக் ஆய்ஷா, மன்னர் சுல்தானின் கட்டுப்பட்டின் கீழ செயல்படுவார். வளைகுடா கூட்டுறவுக கவுன்சில் நாடுகளான சவூதி அரேபியா, ஓமன், பஹ்ரைன், குவைத், ஐக்கிய அரபு குடியரசு ஆகிய 6நாடுகளில பெண் ஒருவர் அமைச்சராக நியமிக்கப் படுவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (பி)

## இஸ்ரேல் இராணுவ விமானம் விழுந்து அதிகாரி பலி

(ஜெருசலேம்)

இஸ்ரேல் இராணுவத்தின் ஓர் என்ஜின் விமானம் விழுந்து விபத் துக்குள்ளானதில் இராணுவ அதிகாரி ஒருவர் இறந்தார். இந்த விமானம் வழக்கமான பயிற்சியில் திங்கட் கிழமை ஈடுபட்டிருந்த போது விபத்து நிகழ்ந்ததாக இராணுவம் தெரிவித்தது. கடந்த ஒரு வாரகாலத்தில் மூன்றாவது முறையாக இஸ்ரேல் ராணுவ விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளது. (பி)

# இரு யேமனியர்களுக்கு எதிராகக் குந்நச்சாட்டுகள்

(நியூயோர்க்)

செப்டமபர் 11ம் திகதிய தாக்குதல் களுக்குமுன்னர் ஒஸாமாபின்லேட னுடன் தொடர்பு வைத்திருந்த யேமன நாட்டவர் இருவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அலகெய்டா, ஹமாஸ் குழுக களுக்கு ஆதரவு அளித்ததாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள் ளது.

ஜெர்மனியில் கைது செய்யப் பட்டவர்களான இவர்கள் மில்லியன் கணக்கில் டொலர்களையும் ஆயு தங்கள், தொடர்பு சாதனங்களையும் வழங்கியதுடன், ஆட்களைச் சேர்த்துக் கொடுத்ததாகவும் இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இந்த இருவரையும் விரைவில் அமெரிக்காவுக்கு நாடுகடத்தி அனுபபுமாறு ஜெர்மனியிடம் கேட்கப் பட்டிருப்பதாக அமெரிக்க சட்டமா அதிபர் றொஸ்வின் ழூவுஸ்கொப் பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்களில் ஒருவர் மொகம்மத் அலி மோ ஆயாட் (54). இவர் யேமனில் சனா எனற இடத்தைச் சேர்ந்தவர். மற்றவர் அவரது செயலாளர் மொகம்மது மொஹ சென்யாஹ்யா செய்யத்(29) இவர் வழங்கிய பணத்தின் ஒரு பகுதி நியூயோர்க்கில் மசூதிகளில் சேகரிக்கப்பட்டவை என்று கூறப் பட்டுள்ளது.

அல-மோயாட் ஒஸாமாவுடன் நேரடி யாகவும் இறுக்கமாகவும் தொடர்பு கொண்டிருந்தவர் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்

யேமனிலும் ஜெர்மனியிலும் இஸ் லாமிய தீவிரவாதிகளுக்கு பணம் வழங்க விரும்புகிறவர்கள் போல் நடித்து உளவுப்பிரிவினர் சேகரித்த தகவல்களின் அடிப்படையில் இந்தக குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள் ளன. (பி)

# தாடியால வேலை போயிற்று

(நியூயோர்க்)

டர்பான் (தலைப்பாகை) அணிந் தால் வேலை நீக்கம் செய்யப்பட்ட அமெரிக்காவில் வாழும் இந்திய சீக்கி யர் அம்ரிக் சிங் ராதோர் நியூயோர்க் பொலிஸ் மீது வழக்குத் தொடர திட்டமிட்டுள்ளார். சீக்கியர்கள் தாடி வைத்துக் கொள்வதும் தலைப்பாகை அணிவதும் வேலைவாய்ப்பு அமலாக்க ஏஜெண்டாகப் பணியாற்றியவர் அம்ரிக் சிங் ராதோர். இவர் அதே துறையில் அதிகாரியாக பதவி உயர்வு பெற்ற பின்னர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். காரணம் ராதோர் தாடி வைத்திருப் பதையும், டர்பன் அணிவதையும் அவருடைய மேற்பார்வையாளர்கள் விரும்பவில்லையாம்.

இது குறித்து பொலிஸில் ராதோர் புகார் செய்தார். ஆனால் பொலிஸார் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. எனவே தனது சிவில் உரிமைகளை புறக்கணிப்பதாக கமிஷனர் ரே கெல்லி பொலிஸ்துறை, மற்றும் நியுயோர்க் நகரம ஆகியவற்றின் மீது அமெரிக்க நீதி மன்றத்தில் வழக்குத் தொடர முடிவு செய்துள ளதாக ரதோரின் வழக்கறிஞர் ஈவீங்கர் பல்லா தெரிவிக்துள்ளார். (பி)

# மிதிவெடி விழிப்புணர்வு அப்பியாசக் கொப்பிகள்

## மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் மிதிவெடி, கண்ணிவெடி பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தத் தக்க படங்கள், அறிவுறுத்தல்கள் அடங்கிய அப்பியாசக் கொப்பிகளை பாடசாலை மாணவர்களுக்கு வழங்க சிறுவர் பாதுகாப்பு நிதியம் முன்வந்துள்ளது.

ஒவ்வோர் மாணவரும் மேற்படி விழிப்புணர்வைப் பெறும் வகையில் இவ்வாறான அப்பியாசக் கொப்பி சகல மாணவர்களுக்கும் தலா ஒன்று என்ற அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, யாழ். கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களை எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத் திட்டமிடல் பிரிவில் வந்து மேற்படி அப்பியாசக் கொப்பிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ)

# மலசல கூடமின்றி மக்கள் அவதி

(சுதுமலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலா பிரிவில் உள்ள சாவல்கட்டு, ஆனைக்கோட்டை, மானிப்பாய் பகுதிகளில் உள்ள 18 விதவைக் குடும்பங்களிற்கு ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் கட்டிமுடிக்கப்பட்ட 18 வீடுகளிற்கு இதுவரை மலசலகூடவசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. கணேஸ்வரராஜா சண்டிலிப்பாய் பதில் பிரதேச செயலாளரிற்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

மேலும் இவ்வீட்டுத்திட்டம் கடந்த இரண்டு வருடங்களிற்கு முதல் பூர்த்தியாக்கப்பட்டது எனவும் இவ்வீடுகளில் உளள மக்கள், மலசல கூடம் இல்லாது பலவித அசௌகரியங்களிற்கு உட்பட்டு வருவதாகவும், கடந்த சில மாதங்களில் இப்பகுதியில் தொற்று நோய்கள் ஏற்பட்டுள்ளதாகவும் மேற்படி கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-252)

# கொழும்பில் தங்கியுள்ள தமிழர் விபரம் சேகரிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது கொழும்பில் தங்கியுள்ளவர்களின் பெயர் விபரங்களை பதிவு செய்யும் நடைமுறை மீண்டும் அமுல் படுத்தப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மாவட்ட நடவடிக்கைகளுக்கான கட்டளைத் தலைமையகம் இதற்கான சிபாரிசை செய்துள்ளதுடன் இதற்கான விண்ணப்பப் படிவங்களையும் பொலிஸார் மூலம் விநியோகித்து வருவதாகக்கூறப்படுகிறது.

சிங்கள மொழியில் அமைந்த இவ்விண்ணப்பப் படிவத்தில் அடையாள அட்டை இல., கொழும்பிற்கு வந்த திகதி,தங்கியுள்ள இடம், கொழும்பிற்கு வரமுன்னர் இருந்த இடம் போன்ற விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

இதேவேளை, இப்பதிவுமுறை வடக்கு-கிழக்குப் பகுதியில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வந்ததும். தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்ததும் அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் நிறுத்தப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

# பிரசாரம் நிறைவு

(கொழும்பு)

அக்குரசைப் பிரதேச சபைக்கான தேர்தல் பிரசார நடவடிக்கைகள் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்தது.

இப்பிரதேச சபைக்கான தேர்தல எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது. தபால் மூல வாக்குகளும், அன்றைய தினமே எண்ணப்படவுள்ளன. (உ-8)

# கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பாணன் குளம் நாச்சி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்ஸவம் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

15 நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இவ்விழா தேர், தீர்த்த, பூங்காவன உற்சவங்கள் முறையே இம்மாதம் 19,20,21 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. (உ-10)

# தொலைபேசி வசதி

(இருபாலை)

யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி வளாகத்தினுள் ரெலிக்கொம் நிறுவனம் தொலைபேசி ஒன்றினைப் பொருத்தியுள்ளது.

இத்தொலைபேசி உடனடியாகவே பாவனைக்கு விடப்பட்டுள்ளது. (உ-11)

# வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டி

(அளவெட்டி)

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைபந்தாட்ட இறுதிப் போட்டி இன்று காலை 9 மணிக்கு குளமங்கால் றோ.க.த.க. பாடசாலையில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கா. சந்திரபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில்,முதன்மை விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

15,17,19 வயதுப் பிரிவுகளில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் மகாஜனாக்கல்லூரி வலைப்பந்தாட்ட அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-83)

# கூட்டம்

(அளவெட்டி)

கீரிமலை கமநலகேந்திர நிலையத்திற்கு உட்பட்ட விவசாய சம்மேளனங்களுக்கான கூட்டம் கடந்த திங்களன்று இடம்பெற்றது.

இதில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைத்தனர். (உ-83)

## சமயாசமய ஊழியர்கள்

# சேமலாபநிதித்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர்

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் பணியாற்றும் 80 ஆயிரம் வரையான சமயாசமய ஊழியர்கள் சேமலாப நிதிக்குாிய நன்மைகளை பெறவிருக்கின்றனர்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படடிருக்கும் சட்டமூலம் நிறைவேறும் பட்சத்தில் நாட்சம்பள அடிப்படையில் தொழில்புரிபவர்களும் சேமலாபநிதித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

இதற்கென ஓய்வூதியத்திற்குரித்தில்லாத ஒரு நாட்சம்பள ஊழியரின் சம்பளம்மாதச்சம்பளமாக கணிக்கப்படும் என்று நேற்றுமுன் தினம் 1942ஆம் ஆண்டின் பொதுச் சேவை சேமலாபநிதிச்சட்டத்திற்கான திருத்தச்சட்டமூலத்தை சபையில் சமர்ப்பித்து உரையாற்றிய நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஓய்வூதியர் அல்லது ஓய்வூதியத்திற்கு உாித் துடையவர் ஒருவர் மரணிக்கும் பட்சத்தில் அவரது மனைவி அல்லது கணவனுக்கு ஓய்வூதிய நன்மைகளை உடனடியாகவே கிடைக்கச் செய்யும் சட்டத் திருத்தமொன்றையும் அமைச்சர் சபையில் சமர்ப்பித்தார்.

இச்சட்ட மூலம் நிறைவேறும் பட்சத்தில் இவ்வகையான விடயங்களில் ஓய்வூதியப் பணிப்பாளர் தனது தற்துணிவைப் பயன்படுத்தி உதவ முடியும்.

சமூகப்பாதுகாப்பு அனுகூலங்கள எதுவுமில்லாத அரச ஊழியர்கள் கணிசமான அளவினர் இதனால் நன்மையடைவர் என்றும் அமைச்சர் சொக்ஸி தெரிவித்துள்ளார்.

17 மாவட்டங்களில் இருந்து பெரும் போகநெல்லை கொள்வன்வு செய்வதற்கு இம்முறை 225 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட் டுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ-8)

# போலியோ சொட்டுமருந்து இவ்வாண்டும் வழங்கப்படும்

(சுதுமலை)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இந்த வருடமும் ஐந்து வயதுக்குடபடட பிள்ளைகளிற்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் தினங்கள அறிவிக்கப்பட உள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

வடக்குகிழக்கு பகுதிகளில் 1995ம் ஆண்டு தொடக்கம் ஐந்து வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டுவருகின்றது. இந்த வருடமும் 8வது தடவையாக இம்மருந்து வழங்கப்பட வுள்ளது.

இதற்கான ஆரம்ப பதிவு நடவடிக்கைகள இம்மாதம் முதல் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக ஆரம்பிக்கப்படவுள்ள்தாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-252)

# நாடகவீடியோப் பிரதிகளை ஆவணப்படுத்த முயற்சி

(யாழ்ப்பாணம்)

நாடக வீடியோ பிரதிகளை ஆவணப்படுத்தும் முயற்சியாக "செயல்திறன் அரங்க இயக்கத்தினர்" ஆடியபாதம் வீதி (சிறிய முத்துத்தம்பி பாடசாலை முன்பாக) திருநெல்வேலியில் உள்ள தமது காரியாலயத்தில் பிரதி சனிக்கிழமை தோறும் "தேட்டம்" என்ற பெயரிலான நாடக வீடியோ படக்காட்சியை நடாத்திவருகிறார்கள்.

ஏனைய கலைகளுடன் ஒப்பிடுகையில் நாடகத்துக்கான ஆவணப்படுத்தல் மிகவும் குறைவாகவே உள்ளதால் நாடக ஆவணக் காப் பகம்ஒன்றின் அவசியத்தை உணர்ந்து இம் முயற்சியை ஆரம்பித்துள்ளனர்.

எனவே, புதிதாக நாடகங்களை தயாரித்து மேடையேற்றுவோர் அவற்றை வீடியோ ஆவணப்படுத்தி அதன் பிரதி ஒன்றையும் ஏற்கனவே உள்ள நாடக வீடியோ பிரதிகளினையும் காப்பகத்திற்கு தந்துதவுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தேட்டம் தொடரில் வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "அன்னையிட்டதீ" எனும் நாடக வீடியோ படக்காட்சி காண்பிக்கப்படவுள்ளது. (உ)

# இனவாதம் பேசுவோரே எனக்கு அச்சுறுத்தலாக உள்ளனர்

## சங்கரி எம்.பி. அவையில் விளக்கம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளாலோ அல்லது வேறெந்த அமைப்புக்களாலோ எனக்கு அச்சுறுத்தல்



இல்லை.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவரான தினேஸ் குணவர்த்தன. ஜே.வி.பி. பிராசாரச் செயலர் போன்றோரே எனக்கு மிகுந்த அச்சுறுத்தலாக உள்ளனர் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வி. ஆனந்த சங்கரி நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவரான தினேஷ்குணவர்த்தன எம்.பி, ஆனந்தசங்கரி உயிருக்குப் பயந்து நாட்டை விட்டு ஓடி விட்டார் என முன்னைய பாராளுமன்ற அமர்வில் குறிப்பிட்டிருந்தார். இது பத்திரிகைகளிலும் வெளியாகியிருந்தது.

இவ் உரை தொடர்பில் ஆனந்த சங்கரி எம்.பி, சபாநாயகரின் அனுதியுடன் கவன ஈர்ப்பு அறிக்கை ஒன்றை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

நான் உயிருக்குப் பயந்து நாட்டை விட்டு ஓடவில்லை. விடுதலைப்புலிகளால் எனக்கு எப்போதும் அச்சுறுத்தல் இருந்ததில்லை.

உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு அரசியல் லாபம் தேட வேண்டாம் என்று குறிப்பிட்டார்.

மேலும் கூறுகையில்,

தவிர்க்க முடியாத காரணத்தினாலேயே பொது நூலகத்திறப்புவிழா தடைப்பட்டது. இதற்கும், எனது வெளிநாட்டுப் பயணத்திற்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்றார். (உ)

# தாய்லாந்துப் பிரதமர் தக்ஷின் "மே"யில் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

தாய்லாந்துப் பிரதமர் தக்ஷின் எதிர்வரும் மேமாதம் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்யவுள்ளார்.

இவர் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களிற்கு நிதியுதவிகளை வழங்கி அவற்றை ஆரம்பித்தும் வைக்கவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை, தாய்லாந்துப்பிரதமரின் இலங்கை விஜயம் மற்றும் இலங்கையில் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக 12 பேர் கொண்ட தாய்லாந்துக் குழு அண்மையில் இலங்கை வந்துள்ளதுடன். தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனையும் சந்தித்துப் பேசியமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

# தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை

## கல்வி அமைச்சர் உறுதி

(கொழும்பு)

வட கிழக்கில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்த நியமனம் வழங்குவதற்கான நிதியை வழங்குவது குறித்து திறைசேரியுடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கவிருப்பதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு உறுதியளித்துள்ளார்.

நேற்று முன்தினம் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குவை பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் வைத்து சந்தித்த மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினா் ஜோசப் பரராஜசிங்கம் வடக்கு - கிழக்கு தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம் குறித்து எடுத்துக் கூறிய போது கல்வி அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கல்வியமைச்சர் இது தொடர்பில் மேலும் கருத்துக் கூறுகையில்,

இது விடயம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு கொண்டுவரவுள்ளதா கவும் தெரிவித்துள்ளார். (உ)

## வட-கிழக்கில் மீளக்குடியமரும் முஸ்லிம்கள்

# மீண்டும் வெளியேற்றப்படமாட்டார்கள் என்ற உறுதிமொழியை புலிகள் வழங்க வேண்டும்

### இர்சாத் பதியுதீன் எம்.பி. கோரிக்கை

(கொழும்பு)

போர் காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீளக்குடியமர்த்தும் போது, எக்காரணம் கொண்டும் அவர்கள் மறுபடியும் வெளியேற்றப்படமாட்டார்கள் என்று உறுதிமொழியை தமிழீழ விடுதலைப்புலிகள் ஜப்பானில் நடைபெறவுள்ள ஆறாவது சுற்றுப பேச்சுவார்த்தைகளின் போது எழுத்து மூலமாக எமக்குத் தரவேண்டும்.

இவ்வாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இர்சாத் பதியுதீன், புத்தளம் வண்ணாத்திவில்லு மக்களின் குடிசைகள் புனரமைப்புக்கென நிதி வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்,

அவர்தொடர்ந்தும்உரையாற்றுகையில்,

இக்கோரிக்கையை ஆறாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம் பிரதிநிதியாக கலந்து கொள்ளவுள்ள அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான அமைச்சர் ரவூபஹக்கீம் மூலம் விடுக்கவுள்ளோம்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக தமிழ் மக்களைப போல முஸ்லிம் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆதலால் அவர்களை மீளக்குடியமர்த்தும் முயற்சிகளில் ஒரு திடமான முடிவு எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

மேலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் குறிப்பாக வடமாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீளக்குடியமர்த்து வதற்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து இவ்விடயம் தொடர்பாக ஓர் தீர்க்கமான முடிவை எதிர்பார்க்கின்றேன் என்பதை மீண்டும் சுட்டிக்காட்டினார். (உ-8)

## மெய்வன்மை போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ சன்மார்க்க மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை வண்ணை வெங்கடேசப் பெருமாள் ஆலய வீதியில் நடைபெறும்.

பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகவிருக்கும் இந்நிகழ்வுக்கு, வித்தியாசாலை அதிபர் து. நடராசலிங்கம் தலைமை வகிப்பார்.

பிரதமவிருந்தினராக கட்டிடப் படவரைஞரும் இணைப்பாளருமான றால்ப் வில்ஹெல்ம் ஸ்டோளுர் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். தியாகராசா கலந்து கொள்வார். (பி)

# பிரஜாவுரிமை திருத்தச்சட்டமூல இழுபறியால் சதாசிவம் எம்.பி. அவை நடுவில் அமர்ந்தார்

## சபை நடவடிக்கைகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்றம் நேற்றுக் காலை கூடியபோது அதன் அமர்வுகள் 10.00மணிமுதல் 10.25 மணி வரையிலான 25நிமிடங்கள் மாத்திரமே நடைபெற்றன.

பாராளுமன்ற நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமான போது பிரஜாவுரிமை திருத்தச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்படவேண்டிய திருத்தங்களை அமைச்சர் வி.ஜ.மு.லொக்கு பண்டார சபையில் சமர்ப்பித்தார்.

இந்தத் திருத்தச் சட்டமூலம் பாராளுமன்ற செயற்குழுவில் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், பொது ஜனஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம் தான் முன்வைத்த விடயங்கள் சில உள்ளடக்கப்படவில்லை எனக்கூறினார்.

இதேவேளை, இந்த திருத்தச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய சரத்துக்கள் அங்கீகரிக்கப்ட்டபின்னர், புதிய விடயங்களை உள்ளடக்கமுடியாது என பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச். எம். அஸ்வர் சுட்டிக்காட் டினார்.

ஆயினும், பிரஜாவுரிமை தொடர்பாக தான் முன்வைத்த யோசனைகள் திருத்தச் சட்டத் தில் உள்ளடக்கப்பட்டதா என்பது குறித்து அரசாங்கம் தெளிவான விளக்கம் ஒன்றை அளிக்க வேண்டும் எனவும் அவர் சபையில் வலியுறுத்தினார்.

இதனையடுத்து, கருத்துத் தெரிவித்த வி.ஜ.மு. லொக்குபண்டார, இத்தகைய திருத்தங்களை தனியொரு திருத்தங்களாக பிரஜாவுரிமை கூட்டத்தில் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை உள்துறை அமைச்சர் மேற்கொண்டு வருவதாகவும் விரைவில் அந்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிச் கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஆயினும், பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம் சபைநடவடிக்கைகளின் போது சபை நடுவே தரையில் அமர்ந்தார். இதனால் சபை நடவடிக்கைகளை இன்று காலை 10.00 மணிவரை பிற்போடப்பட்டுள்ளதாக பிரதித்தலைவர் அறிவித்துள்ளார். (உ-8)



நீர்வேலி செல்லக்கதிர்காம கோவில் பிரதமகுரு -நீர்வைமணியின் மணிவிழாவின்போது இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் தம்பதிகள், நீர்வேலி வாய்க்காற்றரவை விநாயகர் ஆலய பிரதம குருக்கள் தம்பதிகள் ஆகியோரிடம் ஆசி பெறுவதையும், மணி விழா நாயகன் பதிலுரை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்ட

# பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைக் குழு 3மாவட்டங்களில் 350 பேருக்குச் சிகிச்சை

(கொழும்பு)

ஜேர்மன் உதவி அமைப்பினரின் அனுசரணையுடன் இலங்கை வந்துள்ள வெளிநாட்டு மருத்துவக குழுவினர் கொழும்பு, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 113 பேரிற்கு சத்திர சிகிச்சை மேற்கொண்டுள்ளதாக புன்ர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள் ளார்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கொழும்பு ஆகிய இடங்களில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையில் ஈடுபட்ட இக்குழுவினர் கலந்து கொண்ட பத்திரிகையாளர் மாநாடு புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடியேற்ற அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்ற போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட இம் மூன்று மாவட்டங்களிலும் சுமார் 350 பேரிற்கு சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் இதில் 113 பேரிற்கே சத்திர சிகிச்சை மேற்கொள்ளப் பட்டது.

இதற்கு மூன்றரை இலட்சம் ரூபா எனது அமைச்சால் ஒதுக்கப் பட்டது என்றார்.

இப்பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய ஜேர்மன் அமைப்பின் செயலாளர் கருத்து வெளியிடுகையில், இச்சத்திர சிகிச்சைக்கு 10 மில்லயன் ரூபா செலவாகியுள்ளது என்றும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு 1.5 மில்லியன ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களும், யாழ். மருத்துவக் கல்லூரிக்கு 3.5 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களையும் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இக்குழுவில் இடம்பெறும் மருத்துவரான டாக்டர் சாள்ஸ் இது பற்றிக் கருத்துக் கூறுகையில், அண்மையில் முல்லைத்தீவிற்கு விஜயம் செய்த போது புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்துப் பேசியுள்ளேன். அவர் மீண்டும் ஒரு தடவை வன்னிக்கு வருகை தந்து பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை முகாமை நடத்துமாறு என்னைக கேட்டுக் கொண்டார் என்றார்.

ஜேர்மன் உதவி அமைப்பின் அனுசரணையுடன் நடத்தும் இம் மருத்துவக் குழுவில் பிரித்தானியா, ஜேர்மன், பிரான்ஸ், அவுஸ்ரேலியா நாடுகளைச் சேர்ந்தவர்கள் அடங்குகின்றனர்.

இவர்கள் கடந்த மாதம் 17ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் வைத்திய சாலையில் கடமையாற்றியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)


## எழுத்தாளர் சபை

இளம்எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், இலைமறைகாயாக உள்ள எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும்நோக்கத்துடனும்,புதிய எழுத்தாளர்களை உருவாக்கும் எண்ணத்துடனும்

வலம்புரி - சங்குநாதம்

தனது அடுத்த பணியாக ;

எழுத்தாளர் சபையை அமைக்கவுள்ளது. இதில் உறுப்பினர்களாகச் சேர விரும்பும் ஆர்வமுடையவர்கள்,தங்கள் விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

எழுத்தாளர் சபை
வலம்புரி
இல-15,வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

உங்கள் விண்ணப்பத்துடன் பின்வரும் கூப்பனைத் தவறாது இணைத்து அனுப்பவும்.

வலம்புரி ~சங்குநாதம்
எழுத்தாளர் சபை

அலுவலகப் பாவனைக்கு
அங்.இல :

முழுப்பெயர் :
தபால் முகவரி :
பிறந்த திகதி :
தே.அ.அ.இல :
புனைபெயர்(இருப்பின்):


# கடற்படை முகாமை அகற்றக் கோரி பாதுகாப்பு அமைச்சருக்குக்கடிதம்

## மாவை சேனாதிராஜா அனுப்பிவைப்பு

(கொழும்பு)

நெடுந்தீவிலுள்ள கடற்படை முகாமை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அவரது கடிதத்தில் கூறிப்பிடப் பட்டிருப்பதாவது,

நெடுந்தீவு மக்களுடைய இடைவிடாத வேண்டுகோளுக்கு செவி சாய்த்து அச்சம் அற்ற அமைதியான சூழலினை ஏற்படுத்த வேண்டும் என்ற அக்கறையினால் இவ் விட யத்தை தங்கள்கவனத்திற்கு கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட் டுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் ஈ.பி.டி.பிஅமைப்பைச் சேர்ந்தவர்கள் தீவுப் பகுதிக்கு வந்த போதும் அதற்கு மக்கள் பெரும் எதிர்ப்புத் தெரிவித்தனர் .

அவ்வாறு மக்களிடம் எதிர்ப்புத் தோன்றியதற்கு முக்கிய காரணம் ஈ.பி.டி.பி யினர் அதிகாரத்தில் இருந்த போது அவர்களால் மக்கள் எதிர் நோக்கிய கசப்பான அனுபவங்களே.

இந் நிலையில் அவர்களின் இத்தகைய செயலிற்கு ஊக்குவிப்பு அளிபபது போல் அவர்களை பாதுகாக்க அங்கு கடற்படை அனுப்பி வைக்கப்பட்டது.

இச் செயலானது புரிந்துணர்வு உடன்படிகையை மீறுவதாகும்.

அது மட்டுமன்றி அங்குள்ள கடற்படையினர் தமது முகாம்களை மேலும் விஸ்தரிப்பதுடன் பலப் படுத்தியும் வருகின்றார்கள்.

இந் நிலையில் இவற்றினை எதிர்த்து மக்கள் மீண்டும் போராடும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்காதவண்ணம் தாங்கள் உடனடியாக இது விடயத்தில் தலையிட்டு கடற்படை முகாமினை அங்கிருந்து அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக கொள்கின்றேன் என்று உள்ளது. (உ-10)

# மாணவர்களின் கல்வியும்,நல்லொழுக்க வாழ்வும் தான் எதிர்கால சமுதாயத்தை உன்னத நிலை பெறவைக்கும்



இன்றைய மாணவர்கள் நாளைய சமுதாயத்தினர் என்பதை உணர்ந்து தமது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.எதிர்காலத்தில் டாக்டர்களாகவும்,பொறியியலாளர்களாகவும்,கணக்காளர்களாகவும், ஆசிரியர்களாகவும், உத்தியோகத்தர்களாகவும், அதிகாரிகளாகவும்,ஊழியர்களாகவும், வணிகர்களாகவும், தொழிலாளர்களாகவும் வரப்போகிறவர்கள் மாணவர்களே.

### உயர் பண்பு

ஆகையால் இன்றைய மாணவ மாணவிகள் அனைவரும் நல்ல வழிகளில் வாழ்வியலை நடாத்தி வந்தால் தான் வருங்காலத்தில் உருவாகும் சமுதாயம் சிறப்பாக விளங்க முடியும். ஆகையால் இந்தப் பருவத்திலேயே நல்ல குணநடைகளை,நல்லொழுக்கங்களை கற்றுப் பின் பற்றி வருவது அவசியமாகும். மனித வாழ்வு சிறப்படைய வேண்டுமாயின், மனிதநேயமும் அன்பும் இரக்க உணாவும், இன்றியமையாதவையாகும் மனிதன் தன்னையும் தன் குடும்பத்தினரையும்உறவுகளையும் மதிப்பது போல் மற்ற மனிதர்களையும் எண்ணி உணர்ந்து வாழ்வது சாலச்சிறந்த குணவியல் பாகும். பெறறோரை, பெரியோரை, ஆசிரியர்களை, முதியோரை, மற்றோரை, உறவுகளை, தெய்வத்தை மதித்துப் போற்றி வாழ்கின்ற உயர்வான பண்பினை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.இத்தகைய பழக்க நடை முறைகள் வாழ்வில் முன்னேற்றமான நிலைமைக்கு இட்டுச் செல்லும் என்பது உண்மை. நல்ல ஒழுக்க சீலங்களைப் பழகி அவற்றின் வழியாக நல்லவர்களாக வளர்ந்து வரும் போது தான்,எதிர் காலத்தில் இவர்கள் பலதுறைகளிலும் வாழ்வு நிலையில் நல்ல மனிதர்களாகவும் நல்ல குடும்பத்தவர்களாகவும் வாழ்வை நடாத்த முடியும்.நாளையஅரசியல் தலைவர்களும் மாணவர்கள் தான்.

### 1970ஆம் ஆண்டின் முன

கடந்த காலத்தில் 1970 ஆம் ஆண்டுக்கு முன்ன் வீட்டிலிலும் சரி, கல்விககூடங்களிலும் சரி,வெளியிடங்களிலும் சரி, நல்லொழுக்க நடைமுறைகள் மாணவர்களிடையே மக்களிடையே, சிறப்பாக விளங்கி வந்தன.அந்த உயரிய வாழ்க்கை நலன்கள் படிப்படியாகக் குறைந்து, மறைந்து வருவதைக் காணலாம். இது ஒரு சமுதாய சீர்கேடாகும். இந்த நிலைமை தொடருமாயிருந்தால் வருங்கால சமுதாயம் குறைபாடுளள சமுதாயமாக துன்பதுயரங்களைச் சந்திக்க வேண்டிவரும்.

மாணவர்கள் நல்லவர்களாக, வல்லவர்களாக,சாதனை படைப்பவர்களாக வரவேண்டுமாயின் கல்வி அறிவை வளர்ப்பதுடன் நின்று விடாது ,பண்பான வாழ்க்கையையும் அமைத்து வாழவேண்டும். கல்வி என்பது கற்பதன் மூலம் பரீட்சை எழுதி வெற்றிச் சான்றிதழ் தகுதி பெறுவதுடன் நின்று விடலாகாது.அறிவு விடயங்கள் கல்வியிலும் வாழ்விலும் தொடர்ந்து பேணப்படுதல் அவசியமாகும்.ஆகையால் மாணவர்களாக இருந்தாலும் சரி,படித்தவர்களாக, பட்டம் பெற்றவர்களாக,அறிஞர்களாக இருந்தாலும சரி அறிவு விடயங்களை இயலுமான வழிகளில் தேடுவதும்,பயிற்சி செய்வதும் அறிவு வளர்ச்சிக்கு உதவும் என்பது உண்மையாகும்.

### வாசிப்புப்பழக்கம்

இன்று மாணவர்களிடையே, பெரியவர்களிடையே, கற்றவர்களிடையே நூல்கள் ,பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசிக்கும்பழக்கம் அருகிவருவதைக் காணலாம். இதனால் பொதுஅறிவும் உலக அறிவும் நூல் அறிவும் பெறமுடியாத நிலை தோன்றும்போது,படித்த மனிதனும் படிக்கும் மனிதனும், புத்தி விருத்தி குறைவை எதிர் கொள்வதுடன் அறிவுச் செல்வங்கள் விலகிச் செல்லும் நிலை ஏற்படும். ஆனதினால், கற்றலும் அறிவு தேடலும், அவற்றைத் தொடரலும் அவசியமானவை என்பதை மாணவர்கள உணர்ந்து விழிப்படைய வேணடும். இதற்கு இந்த மண்ணில் வெளிவரும் நாளேடுகள், சஞ்சிகை கள்,நூல்கள், வழி காட்ட வேண்டும் நாளேடுகள் வியாபார நோக்கில் நடந்து வந்தாலும் அவை நமது தமிழ மொழியை வளர்த்து வருகின் றன. தற்காலத்தில் நாளேடுகள் உலக விடயங்கள், அரசியல் விடயங்கள் போன்றவற்றை பிரசுரிப்பதுடன் நின்று விடாமல்,நல்ல மக்களை ,நல்ல எதிர் கால சமுதாயத்தை உருவாக்குவதற்கு ,ஒழுக்க விடயங்களையும்,நிர்வாகச் சீர்கேடுகளையும்,பொதுமக்களின் தேவைகளையும்,அகதி மக்களின்அவல நிலையையும் கவனித்து முக்கியத்துவம் கொடுத்து எழுதி வருவதன் மூலம் நன்மை செய்யலாம். இதனால் நாட்டில் நிலவும் ஊழல், துஷ்பிரயோகம் கவனிப்பின்மை, தேவையற்ற ஆடம்பரவிடயங்கள் போன்றவை நீங்கி நன்மை ஏற்படும் எல்லா நாளேடுகளையும் மாணவர்கள் வாங்கிப் படித்து ஆதரிக்கும் நிலைமை நம் மண்ணில் உருவாக வேண்டும்.

### கலாசார சீரழிவுகள்

தற்காலத்தில் நமது மாணவ

**22.02 2003 இல் நடை பெற்ற உலகத் தமிழ்பண்பாட்டு இயக்கத்தின்-பொது அறிவுப் போட்டி (2002) பரிசளிப்பு விழாவில் உ.த.ப .இயக்க இலங்கைக் கிளைத் தலைவர் *ஆ. சண்முகலிங்கம்* தலைமை உரையில் கூறிய கருத்துக்கள்.**

சமுதாயம் ,நமது இளைஞர்கள், நம்முடைய பண்பாடுகள், கலாசார விடயங்கள் போன்றவற்றைக் கவனிக்காமல் வாழ்வதால் நமது மண்ணில் கலாசார சீர்கேடுகள் பெருகி வருகின்றன.இவற்றுக்கு தற்காலத்தில் வெளிவரும் திரைப்படங்களும் காரணமாக விளங்கி வருகின்றன. பாலியலைத்தூண்டும் காட்சிகள், வக்ர விடயங்கள், வன் முறைக் காட்சிகள் ஆபாச உடை களில் காட்சிகள், ஆபாசமான பாடல்கள்,உச்ச ஒலிப் பாடல்கள், ஆடல்கள் போன்றவை தற்கால திரைப்படங்களில் இடம் பெறுகின்றன.தொலைக் காட்சிகளிலும் இவை ஒளிபரப்பாகின்றன. மேலும் போதைப்பொருள் பயன்பாடு வெளிநாட்டு மதுப்பழக்கம் ,சிகரெட்புகைத்தல், ஆடம்பர பொருட்களின் வியாபாரங்கள் நாட்டில் பெருகிவருகின்றன. இவற்றின் பயன்பாடுகள்,பின் விளைவு தாக்கங்களால், மாணவர்கள்,இளைஞர்கள் ,மற்றும்இவற்றில் ஈர்க்கப்படும் மக்கள் பாதிப்புக்குள்ளாகி சீரழிவதை காணலாம். இவற்றைத் தவிர்த்து விலக்கி வாழும் நிலை தோன்ற வேண்டும்.கற்கும் காலத்திலும்,சாதாரண தரம், உயர் தரம் பரீடசைக்குப் படித்து வெற்றி பெறும் வரையிலும் ,திரைப்படங்கள் ,தொலைக் காட்சி மற்றும் மணிக் கணக்கில் கிரிக்கெட் விளையாட்டு போன்றவற்றை விலக்கி வாழ்வதால், கல்வியில் ஆர்வமும், முன்னேற்றமும் கிடைக்கும். மாணவர்கள் கட்டுப்பாட்டுடன் பொறுப்புணர்வுடன் செயல்படுவதால் நல்ல விருத்தியும், வெற்றியும் சிறப்பும் கிடைக்கும் சூழல் தோன்றும். இளமையில் ஒழுக்கமும் கட்டுப்பாடாகவும, வாழும் போது, அவை முதுமையிலும் முழுமையான நன்மையை அளிக்கின்றன.

நமது மண்ணில் ,தமிழ்ப் படிப்பும் தமிழ் ஆர்வமும் ,தமிழ் வளர்ச்சியும் அதற்கான செயற்பாடுகளும் குறைந்து வருவது கவலைக்குரிய விடயமாகும்.இதில் மாணவர்களினதும் கல்வியாளர்களதும் சிந்தனையில் மாற்றம்தேவை.

### ஆறுமுகநாவலா

நமது நாட்டில் பெருமைக்குரிய பெரியார் ஆறுமுகநாவலர், அவர்கள் சைவத்தையும் தமிழ் மொழியையும் ,ஆங்கிலேயரின்ஆதிக்க சீரழிவிலிருந்து மீட்க அரும்பாடு பட்டு வெற்றி கண்டு காப்பாற்றினார். இன்று நாம் பேசுகின்ற தமிழ் நடையையும் ,எழுதும் உரை நடையையும் அவரே நமக்கு ஆக்கித்தந்துள்ளார்.அத்தகைய தொரு முதன்மையான பெரியாருக்கு குருபூசை கொண்டாடினால் மட்டும் போதாது; விழாவும் மகாநாடும் நடைபெற வேண்டும். அவரின் பெயரில் மணி மண்டபம் ஒன்று பொதுமக்களின் போற்றுதலுக்கும்பயன் பாட்டுக்கும் அமைக்கப்பட வேண்டிய துகாலத்தின் தேவையாகும். அவரை உலக முழுவதும் தமிழர் மதிக்கும் நிலை உருவாக வேண்டும்.மேலும் நமது ஒப்பற்றதமிழ் மறையான திருக்குறளை மாணவர்கள் தவறாமல் கற்பதுடன் திருக்குறளில் காணப் படும்சிறப்பான மெய்யியலைக் கடைப் பிடித்து வாழப்பழகிக் கொள்ள வேண்டும். நமது குறள் நெறியில் நாம் வாழ்வாங்கு வாழ அனைத்து குணசீலங்கள் சமயங்கடந்த அறஞ் சார்ந்த நீதிகள் யாவும் அமைந்து கிடப்பதைக் காணலாம்.எனவே மாணவர்கள் கல்வியில் மேம்படுவதுடன் நல்லொழுக்க சீலங்களையும் அறிந்து புரிந்து உணர்ந்து,பின்பற்றி வாழப் பழகிக் கொள்வது பயன் தருவதாகும். அத்துடன் நமது தாய் மொழியில் பற்று வைத்து மொழி வளர்ச்சிக்கு ஆவன செய்தலும் நாட்டுப் பற்றுடன்,மானுடத்தில் மதிப்பும் பற்றும் உள்ளவர்களாகவாழ்வை அமைத்துக் கொள்ளவேண்டும்.

எனவே கல்வியும் ஒழுக்கமான வாழ்வும் முன்னேற்றமான சிந்தனையும செயற்பாடுகளும் நமது சமுதாயத்தை உலகில் முன்னணி நிலைமைக்கு இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை. □

## ப.நோ.கூ.ச.கிளை மீளத்திறப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 14 ஆம் இலக்கக் கிளை இரண்டரை வருடங்களின் பின்னர் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி வைத்தியசாலை வீதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இக்கிளையை சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் எஸ்தேவகுமார் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார். (உ-77)

## சமுர்த்தி வங்கி சங்கம் திறப்பு

(புத்தூர்)

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சமுர்த்தி வங்கிச் சங்கத் திறப்பு விழா அண்மையில் கோப்பாய் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன் தலைமையில் ஆவரங்காலில் நடைபெற்றது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் என். சிவபாதசுந்தரம் சாவகச் சேரி பிரதேச செயல்ர் கே. கேதீஸ்வரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் க. இராசதுரை கணக்காளர் மனோகரன் உத்வித் திட்டப் பணிப்பாளர் ஆர். கதிரமலை நிர்வாக உத்தியோகத்தர் ச. வீரசிங்கம் அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர்.

க. சண்முகலிங்கம் ப.நோ.கூ. சங்க பொது முகாமையாளர் த. கவீந்திரதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-69)

## நியாப் திட்டம் மீள ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மழை காரணமாக இடை நிறுத்தப்பட்டிருந்த நியாப் திட்டங்கள் குடா நாட்டில் மீண்டும் இம் மாதம் இறுதிக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளன. குளம் புனரமைப்பு ,உவர் நீர் தடுப்பு உள்ளிட்ட 10 திட்டங்கள் இவ்வாறு மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நியாப்திட்ட வட்டாரங்கள தெரிவித்துள்ளன. (உ-4)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(புத்தூர்)

ஆவரங்கால் சர்வோதய சனசமூக நிலைய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் மேற்படி நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தின் போது இடம் பெற்றது.

தலைவராக அ. சிங்கராசாவும், உபதலைவராக செ. சந்தனகுமாரும, செயலாளராக மு.பரமசிங்காரமும், உபசெயலாளராக இ.குணராசாவும், பொருளாளராக ம.சந்திரகாந்தனும தெரிவு செய்யப்பட்டனர். (உ-69)

# அரச பணியாளர்களுக்கு நவம்பரில் ஊதிய உயர்வு

(கொழும்பு)

அண்மைக்காலமாக அதிகரித்து வந்துள்ள வாழ்க்கைச் செலவுப் புள்ளி மற்றும்,கடந்த 7 ஆண்டுகளுக்கு மேலாக அரசாங்க ஊழியர்களுக்கு திருப்தியளிக்கக் கூடிய சம்பள உயர்வு வழங்கப்படாமை ஆகிய காரணங்களை கருத்தில் கொண்டு அரச ஊழியர்களுக்கு எதிர்வரும் நவம்பர் மாதத்தில் சம்பள உயர்வொன்றை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுவருவதாக நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் இந்தச் சம்பள உயர்வுக்கான யோசனைகள் உள்ளடக்கப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை,இந்தச் சம்பள உயர்வை சமாதான முன்னெடுப்பு, நீடித்த போர் நிறுத்தம், ஈராக் மீதான தாககுதலை அமெரிக்கா கைவிடுதல் ஆகியனவே தீர்மானிக்கும் எனவும்,

இந் நிலை சாத்தியப்படாது போனால் மேறபடி சம்பளஉயர்வு தாமதம் அடையலாம் எனவும் பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (உ)

# பாலர் பகல் விடுதிகளுக்கு முக்கூட்டு மாப்பொதிகள்

(புத்தூர்)

சமூக நலத்துறைத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட பாலர் பகல் விடுதிகளுக்கான முக்கூட்டு மாப் பொதிகள் யாழ்ப்பாணம் சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு அதிகாரிக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

இதன் பிரகாரம்,குருநகர் அலேமரியா பாலர் விடுதி, அந்தோனியார் பாலர் விடுதி,நீர்வேலி பாலர் விடுதி,பராசக்தி பாலர் விடுதி, கெடிகாமம் பாலர்விடுதி, கலைமகள் பாலர் விடுதி,மந்துவில் பாலர் விடுதி, நல்லூர் அரச சிறுவர் இல்லம் ஆகியவற்றின்அதிகாரிகளை இதனை உடன் வந்து பெற்றுச் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-69)

## மகளிர்தின விழா

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையமும் யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையமும் இணைந்து நடத்தும் மகளிர்தின விழா எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 9மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதமஅதிதி யாக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி வசந்தி அரியரட்ணமும், கௌரவ அதிதிகளாக யாழ். அகதிகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானி கராலய பிரதிநிதி மற்றும் ஜப்பான நாட்டு சகல விதமான அடக்கு முறை கட்கும் எதிரான சர்வதேச இயக்கத் தலைவி நிமால்கா பெனாண் டோவும கலந்துகொள்ள வுள்ளனர். (உ-10)

# கண்ணிவெடிகளை அகற்றுமாறு கமக்காரர் கோரிக்கை

(தென்மராட்சி)

மட்டுவில் வடக்கு மனாவளை வயல் பிரதேசத்தில் இருக்கக்கூடிய கண்ணிவெடிகளை அகற்றித் தருமாறு அப்பகுதி விவசாயிகள் தெனமராட்சி பிரதேச செயலரிடம் நேற்றைய தினம் மகஜர் ஒன்றினைக் கையளித்துள்ளனர்.

2000ஆம் ஆண்டில் அப்பகுதியில்இடம் பெற்ற யுத்தத்தினைத் தொடர்ந்து இவ் வயல் பிரதேசத்தில் விவசாயிகள்தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருந்து வருகின்றமை குறிட் பிடத்தக்கது. (உ-77)

நேற்று 5வது நாளாகவும்

# உறுதிதளராது கைதிகள் உண்ணாவிரதப்போராட்டம்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலை தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணா விரதப் போராட்டம் நேற்று ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது.

பயங்கரவாத மற்றும் அவசர காலச் தடைச்சட்டங்களின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள 87 தமிழ்க் கைதிகளில் 41 கைதிகளே இப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் கைதிகளின் உடல் நிலைமைகளில் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தமக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு வழக்குகளை துரிதப்படுத்த வேண்டும் அல்லது தம்மை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளில் கைதிகள் அனைவரும் உறுதியாக உள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இக் கைதிகள் ஆரம்பித்த போராட்டங்களின் போது அரசியல் வாதிகளும் அமைச்சர்களும் அவர்களை சந்தித்து பல வாக்குறுதிகளை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## இன்று ஒரு தகவல்

# இன்பமும் துன்பமும்

இன்பமும் துன்பமும் சேர்ந்ததுதான் வாழ்க்கை. இதுஎல்லோரும் சொல்லிக்கொண்டிருக்கும் உண்மை! அது சரி! இவை இரண்டும் வருவதற்குக்காரணம் என்ன? துறவி சங்கரானந்த ஜீ இதைப்பற்றி யோசித்துப் பார்த்திருக்கிறார். இன்ப-துன்பம் தோன்றுவதற்கு முக்கியமாக ஆறுகாரணங்கள் உண்டு என்கிறார் அவர். அவை எவை என்பதை நாமும் தெரிந்து வைத்துக்கொள்வோமே.

முதல் காரணம் : சுயநலம், ஒருதாயார் தன்னுடைய சுயநலம் கருதி, தன் மகன் இன்பமாக இருக்கவேண்டும் மென்று ஆசைப்படுகிறார். மகனும் அப்படியே ஆசைப்படுகிறான். அதனால் தாயாரின் இன்பதுன்பங்களை பார்த்துவிட்டு மகனும் இன்ப-துன்பம் அடைகிறான். அந்த அம்மாவுக்கும் அதே நிலைமைதான்.

இரண்டாவது காரணம்: உறவு, 'நான் துறவிஆனபிறகு கூட உறவு என்கிற காரணத்தால், தாயாரின் சுகத்துக்கங்களைக் கண்டு நானும் சுகதுக்கம் அடைகிறேன். என்தாயாரின் நிலையும் இது தான்' என்கிறார் அந்தத் துறவி . மூன்றாவது காரணம்:, அறிமுகம். எனக்கு அறிமுகமான ஒருவரை ரயில் நிலையத்தில் சந்திக்கிறேன். அவர் 'தன்னுடைய பணப்பை எங்கேயோ தொலைந்துவிட்டது' என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார். நானும் வருத்தப்பட்டுகிறேன். அந்தச் சமயத்திலே யாரோ ஒருவர், 'இதுதானா உங்கள் பணப்பை' என்று கொண்டு வந்து நீட்டுகிறார். பணப்பையைத் தொலைத்தவர் சந்தோஷப்படுகிறார். நானும் சந்தோஷப் படுகிறேன். இது அந்தத் துறவி சொல்லுகின்ற அனுபவம்.

நாலாவது காரணம்: கருணை எனக்கு முன் பின் தெரியாத ஒருவனை யாரோ ஒருவன் அடித்துக் காயப்படுத்தி விடுகிறான். கருணை காரணமாக நான் அதற்காகத் துக்கப்படுகிறேன். ஐந்தாவது காரணம்: எதையும் நம்புவது, ஒரு பசுமாட்டை ஒரு முரடன் அடித்துக் கொண்டிருக்கிறான் என்று ஒருவர் வந்துசொல்கிறார். உடனே நான் துக்கப்படுகிறேன். இன்னொருவர் வந்து 'அந்த முரடனைப் பொலிஸ் காரர்கள் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள்' என்று சொல்கிறார். நான் சந்தோஷப்படுகிறேன். முன்றாவதாக ஒருவர் வந்து 'முதல் இரண்டு பேரும் சொன்னது பொய்' என்கிறார். அப்பொழுது நான் இன்ப துன்பமின்றி நிம்மதியாக இருக்கிறேன்.

ஆறாவது காரணம்: தன்மயமாகுதல் ஒரு நாவல் படித்துக் கொண்டிருக்கிறோம். அதிலே வருகின்ற பாத்திரங்களோடு நாம் ஒன்றிப்போகின்றோம். அதனால் அது சிரிக்கின்ற பொழுது சிரிக்கின்றோம். அது அழும் போது நாமும் அழுகின்றோம். இவைகள் அந்தத் துறவி சொல்கின்ற அனுபவ உண்மைகள், இன்ப - துன்பம் தோன்றுவதற்கு சுயநலம், உறவு, அறிமுகம், கருணை எதையும் நம்புவது, தன்மயமாவது என்பனவெல்லாம் முக்கிய காரணங்கள் என்கின்றார் அவர். ஆகவே, ஒட்டு மொத்தமாக யோசனை பண்ணிப்பார்த்தால்... பிற பொருள்கள் மீதுள்ள பற்றுதல் காரணமாகத்தான் நாம் இன்ப -துன்பம் அடைகிறோம் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

'மனிதன் இன்ப-துன்பம் அடைவதற்கு ஏழாவது காரணம் கூட உண்டு சார்!' என்று சொல்லிக் கொண்டு வந்தார் நேயர் ஒருவர். 'அது என்னசார்?' என்று ஆர்வமாகக் கேட்டேன். 'அதுதான் சார்! இன்று ஒரு தகவல்' என்றார் அவர். 'எப்படிச் சொல்கிறீர்கள்?' என்றேன். 'இன்று ஒரு தகவல் கேட்க ஆரம்பிக்கிறபொழுது மனதிலே இன்பம்... ஆரம்பித்தவுடனே... இது ஏற்கனவே கேட்டசாமாச்சாரமாயிற்றே என்று நினைக்கிற பொழுது துன்பம்' என்று அதற்கு விளக்கம் கொடுத்தார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சிறை அதிகாரிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலை அதிகாரிகள் சிலர், சிறைச்சாலை முன் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்ட மொன்றில் ஈடுபட்டனர்.

வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரிகள் இருவர் வேலையில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத் தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரி வித்தே இவ்வார்ப்பாட்டம் நடை பெற்றது.

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிறைச்சாலை அதிகாரி களின் கண்காணிப்பின் கீழ் சிகிச்சை பெற்று வந்த கைதி ஒருவர் தாக் கப்பட்டமை தொடர்பாக மேற்படி இரு அதிகாரிகளும் கடந்த திங் கட்கிழமை கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, நீதிமன்ற அவம திப்புக் குற்றச்சாட்டுக்கு உள்ளாகி, வெலிக்கடைச்சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மனித உரிமை ஆர்வலர் ஒருவரை சிறைக் காவலர்கள் இருவர் தாக்கினார்கள் என்ற குற்றத்திற்காக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவின் பணிப்பின் பேரில் இரு சிறைக் காவலர்களும், தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## பாதுகாப்பாகப் பேணப்படாமையால்

## சான்றாதார வெடிப்பொருட்கள்

# வெப்பம் காரணமாக வெடிக்கும் அபாயம்

(கொழும்பு)

வெடிக்கக்கூடிய நிலையிலுள்ள 40 குண்டுகளும், கிரனேட்டுக்களும் கொழும்பு உயர் நீதிமன்றத்தின் அறையொன்றில் பாதுகாப்பற்ற நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவைகள் பல்வேறு சந்தர்ப்பங் களில் கைப்பற்றப்பட்ட சான்றுப் பொருட்களாகும்.

புலிகள், பாதாள உலகக் கோஷ்டி களின் இருப்பிடங்களிலிருந்தும், மறைவிடங்கள், பாதுகாப்பு இல்லங் களிலிருந்தும் பெறப்பட்டு வழக்கு களுக்குச் சான்றுப்பொருட்களாக பயன் படுத்துவதற்கென்று நீதிமன்ற அறை யில் வைக்கப்பட்டுள்ளதாகவும்,

பாதுகாப்பான முறையிலன்றி, அங்குமிங்குமாகப் போடப்பட்டுக் கிடப்பதாகவும், இப்போது மிக அதிக மாக உள்ள வெப்பம் காரணமாக தாமாகவே வெடித்துவிடலாமென்று அச்சம் நிலவுவதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இவற்றுள் கிளைமோர் குண்டு கள், ஜெலிக்றைற், டைனமைற், கிரனேட் ஆகியன உள்ளன. இவைபற்றி குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. அவற்றுள் மூடி ஒட்டப்பட்ட தகர டப்பாக்கள் சிலவும் உண் டென்றும், அவைகள் நேபாம் குண்டு களாக இருக்கலாம் என்றும், அவற்றை எவ்வாறு கையாள்வது, அகற்றுவது என்று யோசித்து வருவதாகவும் சம்பந் தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ)

## கண்காணிப்புக்குழுவின்

# புதிய தலைவர் மட்டு.விஜயம்

(மட்டக்களப்பு)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் ரெல்வ்சன் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு கடந்த 3,4ஆம் திகதிகளில் விஜயம் செய்திருந்தார்.

அம்பாறை சென்றிருந்த மேஜர் ஜெனரல் ரெல்வ்சன் அம்பாறை மாவட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப் புக் குழு பிரதி நிதி, அம்பாறை மாவட்ட இராணுவ அதிகாரி நிமால் குணதிலகா ஆகியோ ரையும் சந்தித்து உரையாடியுள்ளார்.

இதேவேளை, அம்பாறை மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பவாவையும் புதிய கண்காணிப்புக் குழுத்தலைவர் சந்தித்து- உரையாடியுள்ளார்.

இதனை அடுத்து, மட்டக்களப்பு சென்ற கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர், அங்கு, மட்டக்களப்பு மாவட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப் புக்குழுப் பிரதிநிதிகளையும். இராணு வத்தின் 233ஆம் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் ராஜீதசிங் காவையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

இதன் பிற்பாடு, மட்டு, அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா அம்மானையும் புதிய கண்காணிப்பு குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரெல்வ்சன் முதன் முறையாக சந்தித்துப் பேசியுள்ளார்.

இது இவ்வாறு இருக்க புதிய யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் நாளை வெள்ளிக் கிழமை தனது புதிய பொறுப்புக் களை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்வார் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ம)

## இராசி பலன்

**06.03.2003**
**(மாசி 22, வியாழன்)**

| | |
|---|---|
| திருதியை | பி.ப 3.15வரை |
| ரேவதி | மாலை 6.25வரை |
| இராகுகாலம் | 1.56 - 3.26 |
| சுபநேரம் | 7.56 - 9.26 |

**சித்தாமிர்தம்**

**மேடம்**
சரீரபீடை, முயற்சி தாமதம், திடீர் நன்மை, சத்துருபயம்.

**இடபம்**
மனமகிழ்ச்சி, எடுத்தகாரியம் கைகூடும், பொருள்சேர்க்கை, ஸ்திரிசுகம்.

**மிதுனம்**
பெரியோர் மரியாதை, செய்தொழில் விருத்தி, நல்ல சம்பவம், பணிவிடை

**கடகம்**
ரோகம், அதிக பிரயாசை, பிரயாணம், முயற்சி தாமதம்

**சிங்கம்**
எதிர்பாராத மனஸ்தாபம், போசனசுகம், உடல்நலக் குறைவு, காரிய தடங்கல்.

**கன்னி**
நல்ல வரவேற்பு, காரிய நன்மை, விருந்துபசாரம் சகோதரர் உதவி.

**துலாம்**
சிநேகிதர் வருகை, உடல்நலம், காரிய சித்தி, தனம் சேரும்.

**விருச்சிகம்**
மனக்குழப்பம், காரிய நாசம், சிறுவியாதி,

**தனுசு**
புத்தி சஞ்சலம், துக்கம், முயற்சி தாமதம், போசனசுகம்.

**மகரம்**
அன்னியர் சந்திப்பு, காரிய அனுகூலம், சௌக்கியம்.

**கும்பம்**
மனோசங்கடம், பொருள்விரையம், முயற்சி தாமதம், தனவிரயம்.

**மீனம்**
வெகுமானம், தெய்வ நம்பிக்கை, சயனசுகம், கௌரவம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## அனைத்து தமிழ்எம்.பீக்களையும்

# ஒன்றிணைக்க முயற்சி

(கொழும்பு)

தமிழ்ப் பாராளுமன்ற உறுப் பினர்களை ஒன்றிணைத்து, தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன் றியத்தை அமைக்கும் முயற்சியில் ரெலோ முதல்வரும் வன்னி மாவட் டப் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் ஈடுபடவுள்ளதாக தெரியவந்துள் ளது.

இந்த ஒன்றியத்தில் அனைத்துக் கட்சிகளிலும் உள்ள தமிழ் நாடாளு மன்ற உறுப்பினர்கள் உள்வாங்கப் படவுள்ளனர்.

தற்போதைய சமாதானச் சூழ் நிலையில் தமிழ் மக்களின் பொது வான பிரச்சினைகளை முன்னெடுத் தல், இது விடயத்தில் அரசுக்கு உரிய அழுத்தங்களைக்கெடுத்தல் என்பனவற்றைக்கருத்தில் கொண்டே இவர்கள் ஒன்றிணைக்கப்படவுள் ளனர்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக்கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி ஆகியவற்றில்தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## உயிலங்குளம்

# சோதனைச் சாவடியில் படையினர் கெடுபிடி

(மன்னார்)

மன்னார் உயிலங்குளச் சோதனைச் சாவடியின்ஊடாகச் செல்லும் மக்கள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பெரும் கெடுபிடிகளை மேற்கொள் வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னாரிற்குச் செல்வோர் மீதும் மன்னாரில் இருந்துவெளியேறு வோர் மீதும் கடும் விசாரணை யினை மேற்கொள்ளும் படையினர், உடற்சோதனைகளையும் செய்து வருகின்றனர்.

இதனால் இங்குள்ள மக்கள் இச்சோதனைச்சாவடியில் நீண்ட நேரம் காத்து நிற்பதாகவும், அதிலும் குறிப்பாக அரச உத்தியோகத்தர் கள் பெரிதும் சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இது இவ்வாறு இருக்க, இப் பிரதேசங்களில் உள்ள இராணுவ முகாம்கள் அனைத்தும் புனரமைக் கப்பட்டு பலப்படுத்தப்பட்டு வருவதா கவும் தெரியவருகின்றது. (உ-10)

# இராணுவ விட்டோடிகள் இணைய மீண்டுமோர் சந்தர்ப்பம்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடி யவர்களைச் சட்டபூர்வமாக நீக்கவும். மீண்டும் படையில் சேரவிரும்பு வோரை இணைத்துக் கொள்ளவும் இராணுவத் தலைமையகம் தீர்மானித் துள்ளது.

இராணுவத்திலிருந்து தப்பியோடி யவர்களுக்கு சட்டபூர்வமாக சேவையில் இருந்து விலகும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாகவும் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதேவேளை, இவர்களில் எவரா வது மீண்டும்இராணுவத்தில் இணைய விரும்பினால், அவர்கள் மூன்று வருடங் களுக்கு மேலாகப் படையை விட்டு விலகி இருக்கக் கூடாது என்றும், குற்றச் செயல்கள் எதிலும் ஈடுபட்டு இருக்கக் கூடாது எனவும் பாதுகாப் புத் தலைமைச் செயலகம்நிபந்தனை விதித்துள்ளது.

கடந்த காலங்களில் இராணுவத் தில் இருந்து 51ஆயிரத்து 413படை யினரும், கடற்படையில் இருந்து 4ஆயிரத்து 33பேரும், விமானப்படை யில் இருந்து 4ஆயிரத்து 255பேரும் தப்பி ஓடியுள்ளனர் என இராணுவப் பேச்சாளர் சனத்கருணாரட்ண அறிவித் திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## *மண்டபம் இடிந்து விழும் நிலையில்*

(சில்லாலை)

இளவாலை றோ.க.ஆண்கள் பாடசாலையின் பிரதான மண்டபம் இடிந்து விழும்நிலையில் உள்ளது.

இம்மண்டபத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் உயிருக்கு இது பெரும் அச்சுறுத்தலாக அமைவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-8)

கொன்றன்ன இன்னா செயினும்
அவர் செய்த
ஒன்று நன்று உள்ளக் கெடும்
—குறள்—

வலம்புரி

## மன்னார் சம்பவம்

மன்னார்க் கடலில் அத்து மீறி நுழைந்த தமிழக மீனவர்களுக்கும்,மன்னார்ப் பகுதி மீனவர்களுக்குமிடையே இடம் பெற்ற மோதலில் தமிழக மீனவர்கள் காயமடைய நேரிடடதுடன், பலர் மன்னார் மீனவர்களால் பிடிக்கப்பட்டும் உள்ளனர்.

தமிழக மீனவர்கள் மன்னார்க் கடற்பரப்பில் அத்து மீறி நுழைவதும்,அதனால் மன்னார் மீனவர்களின் தொழில் பாதப்படைவதும் நேற்று, இன்று நடந்த சம்பவங்கள் அல்ல. பல தடவைகள் இத்தகைய நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. இது குறித்து மன்னார்ப் பகுதி மீனவர்கள் பொலிஸாரிடமும், அரசஅதிகாரிகளிடமும் முறையிட்ட போதிலும் சம்பந்தப்பட்டவர்கள்சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

இதன் காரணமாக மன்னார் மீனவர்கள், தமிழக மீனவர்களுடன் நேருக்கு நேர் மோதுகின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

இத்தகைய துர்ப்பாக்கிய நிலை தவிர்க்கப்படக் கூடியது. தமிழ் நாட்டவர்களுக்கும், ஈழத் தமிழர்களுக்குமிடையே இரத்த உறவு உண்டு.அதனை எவரும் மறந்து விடக்கூடாது. ஒரு காலத்தில் வடக்குக் கிழக்கில யுத்தம் நடைபெற்ற போது,ஈழத் தமிழர்கள் தம் தாய்வீடென தஞ்சம் புகுந்ததும் தமிழகத்திலேயே.தமிழ் நாடு நமக்காகக் குரல் கொடுக்கும் என்ற உறுதிப்பாட்டினாலும் எமது போராட்டம் வலுப்பெற்றது.தமிழக முதல்வராக இருந்த காலஞ்சென்ற எம்.ஜி.ராமச்சந்திரன வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் மருத்துவச் செலவிற்கென அபபோது நாலுகோடி ரூபாவை அன்பளிப்பாக வழங்கியிருந்தார்.அது மட்டு மல்ல 83 ஜுலைக் கலவரத்தின் போது ''இரத்தம் துடிக்கிறது”எனக் கூறி ஈழத்திற்கு கடல் மார்க்கமாக வருவதற்கு பழ.நெடுமாறன் தலைமையிலான குழு புறப்பட்டதும் நினைவு புடுத்தப்பட வேண்டியவை.

சில அரசியல் மாற்றங்களும், சூழ்நிலைகளும் தமிழகத்திகும், ஈழத்திற்குமிடை யிலான உறவைப் பாதித்திருப்பினும் அவை தற்காலிகமானவை என்பதை நாம் மறந்து விடலாகாது.எமது சகோதரர்கள் தமிழகத்தவர்கள் என்ற உறவு வலுக்கின்றபோதே,உலக அரங்கல் தமிழர்களின் பெருமை பறைசாற்றப்படும.இல்லையேல் ஒற்றுமை இல்லாத இனம் எனற அடைமொழிக்கு நாம சொந்தக்காரர்கள் ஆகிவிடுவோம்.

விடுதலைப் புலிகளுக்காக-ஈழததமிழர்களுக்காகக் குரல் கொடுத்தார்கள் என்பதற்காக வை.கோவும்,பழ.நெடுமாறனும் தற்போதும் சிறைகளில் வாடுகின்ற போது தமிழக மீனவர்களைத்தாக்குவது,அவர்களைக் காயப்படுத்துவது,பிடித்து வருவது எல்லாம் ஈழத் தமிழர்களின உறவு சந்தர்ப்பவாதமான தென்ற கருத்தை ஏற்படுத்தி விடும்.

எனவே ஈழத் தமிழர்கள் தமிழகத்துடன் நல்லுறவைப் பேணுவதில் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

# பிரதி உரிமையைப் பேணுவதில் உள்ள சிரமங்கள்

பிரதியுரிமை (copy right) என்பது எழுத்தாளர்கள் தாம் உருவாக்கும் ஆக்கங்களுக்கான சொத்துரிமையாகும். இலக்கியம், விஞ்ஞானம் மற்றும் கலைத் திறன்களை உள்ளடக்கிய ஒவ்வொரு கலை இலக்கியப் படைப்பையும் பிரதி உரிமை பாதுகாக்கின்றது.

ஒரு ஆக்க கர்த்தாவின் அனுமதியின்றி அவரது படைப்பினை பிறர் பிரதி பண்ணுவதை அல்லது வேறு வகையில் பயன்படுத்துவதை இது தவிர்க்கின்றது. இந்த உரிமை ஒரு குறிப்பிட்ட வருடங்கள் அல்லது படைப்பாளி உயிருடன் இருக்கும் வரை நீடித்திருக்கும். அண்மைக் கால சட்டத் திருத்தம் ஒன்றின்படி படைப்பாளியின்

## தொழில் நுட்ப வளர்ச்சியினால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள்

மரணத்தின் பின்னர் 70 வருடங்கள் வரை இது நீடிக்கும். இங்கே குறிப்பாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால் பிரதி உரிமையானது கருத்துக்களின் வெளிப்பாட்டு முறையை (மாதிரியை) தான் பாதுகாக்கின்றதேயன்றி கருத்துககளையன்று.

தெரிந்தெடுக்கப்பட்ட விடயம் சொற்றொகுதியின் ஒழுங்கமைப்பு இசை வடிவங்கள், வண்ணங்கள், தோற்றங்கள் முதலியவை பிரதி உரிமைச் சட்டத்தினால் பாதுகாக்கப்படுகின்றன. இந்த உரிமையானது படைப்பாளிகளுக்கு ஊக்கமளிப்பதாகவும் பொருளாதார உரிமைகளையும் தார்மீக உரிமைகளையும் பாதுகாப்பதாகவும் அமைகின்றது.

அனேக நாடுகளில் பிரதி உரிமையானது வெறும் பிரகடனமாகவே காணப்படுகின்றது. அது ஒரு மூலப் பிரதியின் படைப்பாளியானவர் தமது படைப்பை பிறர் பிரதி பண்ணுவதையோ அல்லது பயன்படுத்துவதையோ தடுக்கும் உரிமை உடையவர் என்று கூறுகின்றது. இது ஒரு மிக விஸ்தாரமான விடயம். இது ஒருவரின் சொந்தப் படைப்பின் இலக்கிய கலைத்துவப் பெறுமதி அல்லது தகுதிகளைக் கவனத்தில் கொள்ளாமல் மூலப்பிரதியையே கவனத்தில் கொள்கின்றது.

பிரதி உரிமை பற்றிய எமது சட்டத்தின் பிரிவு முதல் நோக்கில் போதுமானதாகவே காணப்படுகின்றது. ஆனால் பிரதி உரிமை மீறலானது பரவலாக இடம்பெற்று வரும் இக்காலத்தில் இச்சட்டம் ஏன் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதில்லை என்ற கேள்வி எழுகின்றது. இது என்னைப் பொறுத்தவரை ஒரு சமூகப் பிரச்சினையாகவே தோன்றுகின்றது. எமது நாட்டில் ஒரு படைப்பாளி, ஒரு பாடகர் அல்லது இசையமைப்பாளர் யாரானாலும் மிக எளிமையான வாழ்க்கை நடத்துபவராகவே இருக்கிறாரகள.

அதனால் ஒரு வழக்கின் முதல் நாள ஆரம்ப செலவுகளைச் சமாளிப்பதே அவரால் முடியாத காரியமாகவிருக்கின்றது.

பெரும்பாலான வளரும் நாடுகளில் இதுவே பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. வளர்ந்த நாடுகளில் கலைஞர்கள் (இலக்கியவாதிகள்) பெரும் இலட்சாதிபதிகளாகக் காணப்படுகின்றார்கள். அவர்கள் சிறிது என்றாலும் நீதி மன்றம் செல்லத் தயாராயிருக்கிறார்கள். எமது நாட்டில் சராசரி கலைஞன் ஏன் ஒரு வழக்கை நடத்தித் தாக்குப் பிடிக்கும் நிலையில் இல்லை. மேற்கு நாடுகளில் பிரதி உரிமையை மீறுகின்ற ஒரு தொழில் அதிபரால் வழக்குகளைச் சந்திக்காமலே தனிப்பட்ட முறையில் சமரசங்களை ஏற்படுத்திக் கொள்ளுமளவிற்குப் பணமும் வசதியும் இருக்கின்றது.

நம்நாட்டில் பெரும்பாலான எழுத்தாளர்களுக்கு பிரதியுரிமைகள் பற்றி ஒன்றுமே தெரியாது. மேலும் உரிமைகளை முன்வைத்தால் தமது ஆக்கங்களுக்கு மேற்கொண்டும் மவுசு இல்லாமல் போகலாம் என்றும் அவர்கள் கருதுகின்றார்கள். அதாவது பிரதி உரிமை கோரி நீதிமன்றங்களை நாடும் பொழுது, தங்கள் ஆக்கங்கள் ஏற்கனவே வெளியாவதற்கு உதவியாகவிருந்த தொழில் அதிபர்களையே எதிர்க்க நேரலாம் என்றும் அதனால் மேற்கொண்டும் தங்கள் ஆக்கங்கள் வெளிப்படுவதற்கு இவர்கள் முட்டுக் கட்டைகளாக இருந்துவிடக் கூடும் என்றும் அச்சம் நிலவுகின்றது.

பிரதியுரிமையானது தனித்துவமான உரிமைகளை படைப்பாளிகளுக்கு வழங்குகின்றது. ஒருவரின் படைப்பினை வேறு ஆட்கள் சுரண்டல் செய்வதிலிருந்து காப்பளிக்கின்றது. எதுவானாலும் படைப்பாளருக்கு அவரது படைப்புக்கு போதுமான சன்மானம் கிடைக்கவேண்டிய• அதே சமயம் அந்தப் படைப்பின் கருத்துக்கள் பொது மக்களைச் சென்றடைய வேண்டியதும் அவசியமாகின்றது. படைப்பாளி தன் உழைப்பின் பலனை அனுபவிக்க அனுமதிக்கப்படவேண்டும். அவன் அடையும் பலன் ஏனைய மக்களைப் பாதிக்கும் வகையில் இருக்கலாகாது.

நவீன தொழில் நுட்பம் காரணமாக மீளமைப்பு (அல்லது பிரதி எடுத்தல்) என்பது புரட்சிகரமான மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டுள்ளது. நவீன தொழில் நுட்பம் காரணமாக பிரதி உரிமையும் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியிருக்கின்றது. சமகால நிலைமைகளில் துரிதமான தொழில்

**சவுன்டரி டேவிட்**

நுட்ப முன்னேற்றமானது அறிவு சார்ந்த சொத்துரிமைகள் விடயத்தில் முக்கிய பங்கை வகிக்கின்றது.

தொழில் நுட்ப வளர்ச்சியானது ஆக்க இலக்கிய கலாசார படைப்புகளை பொதுமக்கள் பெற்றுக் கொள்ளும் வகையில் புதிய வழி முறைகளை உருவாக்கிக் கொடுத்துள்ளது. இலக்கியம், இசை மற்றும் திரைப்படங்கள் பொதுமக்களுக்கு கிடைத்து வந்த பாரம்பரிய முறைகளை புதிய தொழில் நுட்ப வளர்ச்சியானது மாற்றி விட்டிருக்கின்றது. இதனால் புதிய பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இலக்கியப் படைப்புக்களை முழுமையாக புகைப்படங்கள் எடுத்து விற்பது, செயல் நூல்கள் உருவாக்கல் மற்றும் பிரதி உரிமை சட்டங்களை புறக்கணித்துவிட்டு அச்சிடுதல் போன்றவை பிரதி உரிமையை அசட்டை செய்வதானது பிரதி செய்யும் பழக்கம் எவ்வளவு இலகுவாகியுள்ளது என்பதை எடுத்துக்காட்டும். இந்தப் பிரச்சினை தீவிரமடைவதற்கு தொழில் நுட்ப முன்னேற்றமே ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ளது என்று கூறலாம். நகல் எடுக்கும் புதிய உபகரணங்கள், இசை, படம் மென்பொருள்களை ஆபத்தில்லாமலும் இலகுவாகவும் அதிக செலவில்லாமலும் பிரதி செய்து கொள்ள உதவுகின்றன. போலியான றோலெக்ஸ் கடிகாரங்கள் குக்கி கைப்பைகளும் கூட இந்த ரகத்தைச் சேர்ந்தவையே.

இன்னொரு விடயம் சமீப காலத்தில் அதிகமாகப் பேசப்பட்ட தென்னவென்றால் அரங்க ஆக்கங்களாகும். அரங்கக் கலைஞர்கள், ஒலி நாடா தயாரிப்பவர்கள், ஒலிபரப்பு நிறுவனங்கள் (ரோம்) உடன்படிக்கை விண்கலங்களினூடாக வெளியாகும் நிகழ்ச்சிகள் (பிரஸ்ஸல்ஸ் உடன்படிக்கை) போன்றவை தொடர்பான உடன்படிக்கைகளில் இலங்கை ஒரு தரப்பாக கையெழுத்திடவில்லை. அதனால் இவை தொடர்பான உரிமைகள் இங்கு அங்கீகரிக்கப்படவில்லை.

21 ஆம் நூற்றாண்டில் இன்னும் பல சிக்கலான தொழில் நுட்பங்கள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. இவை பிரதி உரிமைகளைத் தொடர்ந்தும் பாதித்துக் கொண்டு தான் இருக்கப் போகின்றன.

தகவல் தொழில் நுட்பம் தேசிய எல்லைகளைக் கடந்து போய்க்கொண்டிருப்பதால் அறிவு சார்ந்த சொத்துரிமைச் சட்டங்கள் சோதனைகளுக்குள்ளாகும் என்பது திண்ணம். இலங்கை அதன் பொருளாதார சிக்கல்களைக் கடந்தாக வேண்டும். அதன் பின் அறிவு சார்ந்த சொத்துரிமைகளை பாதுகாப்பதின் மூலம் நீண்ட காலப் பயன்பாடுகள் பற்றி ஆலோசிக்க முடியும்.

(ஆங்கிலப் பத்திரிகை ஒனறில் வெளியான கட்டுரையின் தமிழ்த் தொகுப்பு- பி)

## பாலர் பாடசாலை

(இருபாலை)

பருத்தித்துறை மேலைப் புலோலியில் மூன்று லட்சம் ரூபா செலவில் பாலர் பாடசாலை ஒன்று அமைக்கப் பட்டு வருகின்றது.

மேற்படி பாலர் பாடசாலை அமைப்புக்கு சர்வோதய நிறுவனம் 75 ஆயிரம் ரூபாவினை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-11)


## சூனியப் பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைக்கு அனுமதிக்கக் கோரிக்கை

(வவுனியா)

வவுனியா மகா கச்சைக்குடிப் பிரதேசத்தில் உள்ள சிங்கள மக்கள் இப்பகுதியில் தம்மை விவசாயம் செய்ய அனுமதிக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யுத்த சூனியப் பிரதேசமான மகா கச்சைக்குடிப் பிரதேசத்தில் தாம் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதானால் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என அவர்கள் மேலும் கேட்டுள்ளனர்.

இப்பிரதேசம் யுத்த சூனியப் பிரதேசமாக அமைந்துள்ளதால் இது குறித்து உடனடியாகத் தீர்மானம் எடுக்க முடியாதுள்ளதாகவும், இது தொடர்பாக தமது தலைமைப்பீடத்துடன் பேசிய பின்னர் முடிவை எடுப்பதாகவும் வவுனியா மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார். (உ-10)



## சாயி அருளமுதம்

ஏதோ ஒன்றைப் பெறுவதற்காக இறைவனை நீங்கள் வணங்கும் பொழுது, அது நீங்கள் விரும்புகின்ற அளவு விரைவாகவோ அல்லது நீங்கள் விரும்பும் முறையிலோ கிடைக்கப்பெறாத பட்சத்தில் அவரைக் கண்டனத்துக்குள்ளாக்கும் அபாயம் உண்டு. கடவுள் அன்னியர் எனவும் அவர் ஏதோ வெகு தொலைவிலுள்ள ஒரு சொர்க்கத்திலோ அல்லது குறிப்பிட்ட ஒரு புண்ணிய ஸ்தானத்திலோ இருப்பவர் எனவும்நீங்கள் எண்ணுவதாலேயே இவ்விதமான நெருக்கடி ஏற்படுகிறது. கடவுள் உங்களுக்குள்ளேயும், உங்கள் ஒவ்வொரு வார்த்தையிலும், உங்கள் ஒவ்வொரு செயலிலும், ஒவ்வொரு எண்ணத்திலும் இருக்கிறார். ஆகவே அவருக்கேற்றதாக உங்கள் பேச்சையும், செயலையும் எண்ணத்தையும் வைத்துக் கொள்ளுங்கள். அவர் உங்களுக்கு வகுத்திருக்கும் கடமையை உங்கள் ஆகக் கூடிய திறமைக்கும், மனச் சாட்சியின் திருப்திக்கும் ஏற்றவாறு நிறைவேற்றுங்கள். அதுவே மிகுந்த பலனையளிக்க வல்ல பூஜையாகும்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

## மைற்ஸ் நோயைக் கட்டுப்படுத்த மாற்று வழிமுறை கண்டறிவு

(கொழும்பு)

தென்னை மரங்களில் பரவிவரும் மைற்ஸ் நோயைக் கட்டுபப்படுத்துவதற்கு உயிரியல் முறைகளை பயன்படுத்துவது சம்பந்தமான சோதனைகள் வெற்றியளித்திருப்பதாக தென்னை ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது.

இந்நோய்க்கு காரணமான கிருமியை அழித்தொழிக்கும் ஓர் புதிய உயிரினத்தை தென்னை ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்துள்ளது.

இப்புதிய உயிரினத்தை இனப் பெருக்கம் செய்து தெங்குத் தோட்டங்களில் பரவவிடுவதற்கான சோதனைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

தற்போது பயன்படுத்தப்படும் மாஜோ என்ற இரசாயனக் கலவையும் இந்நோயைக் கட்டுப்படுத்துகின்ற போதிலும் இதனைத் தெளிப்பது சம்பந்தமான நடைமுறைச் சிக்கல்கள் இப்போது இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## ஆஸ்ரர் விருது பெற்ற பத்திரிகையாளர்

(கோட்டை)

இந்திய எழுத்தாளரும் பத்திரிகையாளருமான குல்திப்நாயர் அண்மையில் பிரிட்டிஷ் ஆஸ்ரர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். குல்திப்நாயர் ஒரு நூலாசிரியரும், சட்டவல்லுநரும், முன்னாள் இந்தியப் பாராளுமன்ற உறுப்பினரும் ஆவார். தற்பொழுது இந்திய மேல் சபை உறுப்பினராகவிருக்கும் அவர் இலங்கையில் ''ஐலண்ட்” போன்ற பத்திரிகைகளிலும் 'பத்தி' எழுத்தாளராக இருந்து வருகின்றார்.

கொழும்பிலுள்ள காமன்வெல்த் பத்திரிகை சபை மண்டபத்தில் 'ஆஸ்ரர்' விருது அவருக்கு வழங்கப்பட்டது. ஆஸ்ரர் பிரபுவின் புதல்வர் பிலிப் ஆஸ்ரர் இந்த விருதினை குல்திப் நாயருக்கு வழங்கினார்.

விருதைப் பெற்றுக் கொண்டு திரு.நாயர் பேசுகையில், தென் ஆசியா முழுமையும் எல்லைகள், சமூகங்கள், சமயங்களைக் கடந்து ஒன்றாக செயல்பட வேண்டும் என்றார்.

இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் ஆசிரியராக ஒரு காலத்தில் கடமை புரிந்தவரான குல்திப் நாயர் திருமதி இந்திராகாந்தியின் ஆட்சியின் போது சிறையில் இருந்தவர்.

காமன்வெல்த் நாடுகளில் மிகவும் பொருத்தமான பத்திரிகையாளர் என்று கருதப்படும் ஒருவருக்கு இந்த ஆஸ்ரர் விருது வருடந்தோறும் வழங்கப்பட்டு வருகின்றது. (பி)

# படையினர் மனித உரிமையை மீறியதால் இலங்கையின் கௌரவத்திற்கு பாதிப்பு

## இராணுவத் தளபதி பலகல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த காலத்தில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மனிதவுரிமை மீறல்களினால் சர்வதேச சமூகம் மத்தியில் இலங்கையின் மதிப்பு பாதிக்கப்பட்டிருந்ததென்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

நேற்று சர்வதேச மனிதாபிமான கற்கை மற்றும் மனிதவுரிமை தொடர்பாக படையதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் பயிற்சி நெறியினை ஆரம்பித்து வைதது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நீடித்துவந்த பிரிவினைவாத யுத்தத்தில் பயங்கரவாதத்தை ஒழிப்பதே எமது பிரதானமான நோக்கமாக இருந்தது. இதன் போது பிற சக்திகளால் மட்டுமன்றி படையினராலும் மனிதவுரிமைகள் மீறப்பட்டுள்ளன.

இதனால் படையினரும் அதிகாரிகளும் தேவையற்ற பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

இந்நிலைமைகள் சர்வதேசத்தில் இலங்கைப்படையினரின் கௌரவமும் நம்பிக்கையும் இழக்கப்படுவதற்குக் காரணமாகியது.

இதனைப் புரிந்து கொண்டதன் அடிப்படையிலேயே படையினருக்கு மனித உரிமைகள் தொடர்பான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பலகல்ல மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந் நிகழ்வில் சிறப்புரையாற்றிய அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தமது உரையில்,

சாதாரண மக்கள் மத்தியில் மனித உரிமைகள் மீறல் பற்றிய புகார்கள் வருவது குறைவு.

இதற்குக் காரணம் அம் மக்களுக்கு கல்வி அறிவு குறைவாகும். இதனால் அவர்கள் மனித உரிமை மீறலுக்கு எதிராக நீதிமன்றம் செல்வதில்லை.

மனித உரிமை மீறலுக்காக பொலிஸாருக்கு எதிராக நீதிமன்றம் செல்வதற்கும் யாப்பில் இடமுண்டு. ஆனால் இராணுவத்தினருக்கு எதிராக நீதிமன்றம் செல்ல யாப்பில் இடமில்லை. இந் நிலைமை மாற்றப்பட வேண்டும் என்றும் பீரிஸ் மேலும் தெரிவித்தார். (இ)

# வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவும் கல்வியியல் பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிப்போம்

## உலக வங்கிப் பிரதிநிதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் வடக்குக் கிழக்கு மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி நான் நன்கு அறிவேன். இவ்வாறு உலக வங்கிப் பிரதிநிதி பீற்றர் கொலன் ஸேர் தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 2மணியளவில் யாழ்.கல்வி வலயத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதேஅவர் இவ்வாறு குறிப்பிட்டார். கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

வடக்குக் கிழக்குப் .பகுதிகளில் மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி நாம் கூடிய கவனம் செலுத்தி வருகின்றோம். பாடசாலை மாணவர்களுக்கான பாட நூல்களை சிங்கள மொழியில் இருந்து தான் தமிழாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் ஆசிரியர் பற்றாக்குறை, யுத்தத்தினால் பாடசாலைகள் அழிக்கப்பட்டமை மற்றும் இதர பிரச்சினைகள் குறித்து நேரில் அவதானித்து அறிந்து கொள்வதற்காகவே நாம் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளோம்.

. இதன் மூலம் வடக்குக் கிழக்கு பகுதிகளில் சிரான் ஊடாக மேற்கொள்ளபடவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு எமது ,முன்மொழிவுகளை சமர்ப்பிக்கவுள்ளோம் என்று கூறினார்.

இக் கூட்டத்தில் மாணவர்களின் சுதந்திரமான கல்விக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தும் பல்வேறு விடயங்கள்குறித்து உலக வங்கிக் குழுவினருக்கு சுட்டிக் காட்டப்பட்டது.

யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, கல்வி மேம்பாட்டுப் பேரவை பொறுப்பாளர் அருண்மாஸ்டர் மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர்கள்,கோட்டக் கல்வி அதிகாரிகள் உட்பட கல்வித் துறைசார் அதிகாரிகள் பலரும்

---

**தலைவர்....**

அதிகாரியாகிய இருவரும் விடுதலைப் புலிகளின் தலைவரின் விஷேட பணிப்புரைக்கு அமைவாக விடு

**க.கா. குழுவின் புதிய தலைவருக்கு**

## சாவகச்சேரி மக்கள் பிரதமருக்கு கடிதம்

(திருநெல்வேலி)

தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் தம்மை மீளக்குடியமர்த்த உடன்நடவடிக்கைஎடுக்குமாறு கோரி சாவகச்சேரி மக்களால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இக் கடிதம் தொடர்பாக சாதகமான பதில் கிடைக்காவிடின் சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் முன்பாக மறியல் போரா்ட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அக் கடிதத்தில்குறிப்பிடப்பட்டுள்ளது. (த-43)

## நாளை ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பெண்களின் பிரச்சினைகள்,தேவைகள் பற்றிக் கண்டறிவதற்கான ஒன்று கூடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடை பெறும். (ந)

## ஆர்ப்பாட்டம் மீது கண்ணீர்ப் புகைக்குண்டு

(கொழும்பு)

ராஜகிரியவில் இருந்து பாராளுமன்றம் நோக்கி சப்பிரகமுவ பல்கலைக் கழக மாணவர்களாலும், பெற்றோர்களாலும் நேற்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியை பொலிஸார் கணணீர் புகைக் குண்டு வீசிக்கலைத் தனர்.

சபபிரகமுவ பல்கலைக் கழகத்தில் ஏற்பட்டுள்ள பலஅசௌகரியங்களுக்கு தீர்வு காணும் நோக்குடனேயே இப் பேரணி நடத்தப் பட்டுள்ளது. (உ-8)

## மெய்வல்லுநர் போட்டி

(கொக்குவில்)

வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலய இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு அதிபர் திருமதி சிந்தாமணி பழனி தலைமையில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக டாக்டர் க.நவரத்தினமும், கௌரவ விருந்தினராக விடுதலைப் புலிகளின் தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் அருந்தவமும், வேலணை கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் சி.கார்த்திகேசும் கலந்து

பிரதிநிதி பீற்றா கொலன் ஸோ தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 2மணியளவில் யாழ்.கல்வி வலயத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் உரை

வடக்குக் கிழக்குப் .பகுதிகளில் மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி நாம் கூடிய கவனம் செலுத்தி வருகின்றோம் பாடசாலை மாணவர்களுக்கான பாட நூல்களை சிங்கள மொழியில் இருந்து தான் தமிழாக்கம்

காகவே நாம் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளோம்.

. இதன் மூலம் வடக்குக் கிழக்கு பகுதிகளில் சிரான் ஊடாக மேற்கொள்ளபடவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு எமது முன்மொழி

உலக வங்கிக் குழுவினருக்கு சுட்டிக் காட்டப்பட்டது.

யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, கல்வி மேம்பாட்டுப் பேரவை பொறுப்பாளர் அருண்மாஸ்டர் மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர்கள்,கோட்டக் கல்வி அதிகாரிகள் உட்பட கல்வித் துறைசார் அதிகாரிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர். (சு-7)

மணிக்கு அதிபர் திருமதி சிந்தாமணி பழனி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக டாக்டர் க.நவரத்தினமும், கௌரவ விருந்தினராக விடுதலைப் புலிகளின் தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் அருந்தவமும், வேலணை கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் சி.கார்த்திகேசும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5,243)

---

### தலைவர்....

அதிகாரியாகிய இருவரும் விடுதலைப் புலிகளின் தலைவரின் விஷேட பணிப்புரைக்கு அமைவாக விடுதலை செய்யப்பட்டு கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.இதன் போது தலைவர் பிரபாகரன் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் கருத்துக் கூறுகையில், நாம் சமாதானத்தில் மிகவும் உறுதியாகவும் நேர்மையாகவும் இருக்கின்றோம என பதை எடுத்துச் காட்டும் நல்லெண்ண நடவடிக்கை யாகவே இருவரையும விடுதலை செய்கின்றோம் இனிவரும் காலங்களில் போர் நிறுத்த மீறல் சம்பவங்கள் மற்றும் அசம்பாவிதங்கள் இடம் பெற்றால் அதனை போர் நிறுத்தக் காண்காணிப்புக் குழுவிடமே தெரிவிக்கவேண்டும். அதனை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவே கையாள வேணடும்அரசாங்கத்திடமும் அதனை வலியுறுத்துங்கள்.

இனிமேல் கைது செய்யப்படுவோர் நீதிமன்றங்களிலோ,பொலிஸாாடமோ ஒப்படைக்கக் கூடாது. போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அதனைத் தீர்த்து வைக்கும் பொறுபபு கண்காணிப்புக்குழுவையே சார்ந்தது.

பெண் போராளிகள் படையினரால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டமை, போராளிகள் அசிங்கப்படுத்தப்படுகின்றமை, பொது மக்கள் சுரண்டப்படுகின்றமை என்பன படையினரின் ஆத்திரமூட்டும செயற்பாடுகள் ஆகும்.

இந் நிலையிலும் நாம் தளம்பாமல் பொறுமைகாத்து சமாதானத்தைக் கடைப்பிடித்து வருகின்றோம்.ஆனால் அரசு எம் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களையே சுமத்தி வருகின்றது என்றும் குறிப்பிட்டார்.

இந் நிலைமைகள் தொடர்பாக எதிர்காலத்தில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகவும்,விடுதலைப்புலிகளின் 6போராளிகளின் விடுதலை குறித்து அரசாங்கத்திடம் பேசுவதாகவும் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் அச் சநத்திப்பின் போது உறுதி அளித்துள்ளளார். (இ)

---

க.கா. குழுவின் புதிய தலைவருக்கு

# புலிச்சின்னம் வழங்கி பிரபா கௌரவித்தார்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன். இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிவ்சன் அவர்களுக்கு புலிச்சின்னம் பொறிக்கப்பட்டநினைவுப் பரிசொன்றை வழங்கிக் கௌரவித்துள்ளார்.

நேற்று விடுதலைப் புலிகளின் தலைவரைக் கண்காணிபபுக் குழுவின் புதிய தலைவர் கிளிநொச்சியில் முதல் தடவையாகச் சந்தித்து கலந்துரையாடினார்.

இச் சந்திப்பின் ஞாபகார்த்தமாகவே தலைவர் பிரபாகரனால் நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. (இ)

---

### தமிழக...


வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.மீனவர்கள் குணமடைந்ததும் அவர்களை நீதிமன்றில் உடனடியாக ஆஜர் செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள் இன்று தாயகம் திரும்புகின்றனர். இதே வேளை மீனவர்களால் கைப்பற்றப்பட்ட படகுகளில் 18 படகுகள் மன்னாரிலும் 9 படகுகள் ஊர்காவற் துறையிலும் நிறுத்தப் பட்டுள்ளன. (இ)

## கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் சிவகாமி அம்மன் கோயில் வருடாந்த உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர் வரும் 17,18,19 ஆம் திகதிகளில்முறையேதேர்,தீர்த்தம் பூங்காவன உற்சவங்கள் இடம் பெறவுள்ளன. (உ)



யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில்தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வை.கவியின்பன் உரையாற்றுவதைப்படத்தில் காணலாம்.

---

கஞுத்துறை தமிழ் அரசியல் கைதிகளுக்கு

# ஆதரவு தெரிவித்து புளொட் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

களுத்துறைச்சிறைக் கைதிகள் கடந்த முதலாம் திகதி முதல் மேற்கொண்டு வரும் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து புளொட் அமைப்பு அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

எதற்காக கைது செய்யப்பட்டோம்,எதற்காக விசாரணைகள் இன்றி சிறை வைக்கப்பட்டுள்ளோம் என்று தெரியாத நிலையில் மனநோயாளிகளாக மாறிக் கொண்டிருக்கும் தென்னிலங்கை சிறைகளில் வாழும் தமிழ் அரசியல் கைதிகள் பற்றி யாரும் பெரிதாக சிந்தித்துப் பார்ப்பதாக இல்லை.

இவர்கள் எவ்வித விசாரணைகளுமின்றி சிறைகளில் அடைக்கப்படடிருப்பது கூட ஒருமனித உரிமை மீறலாகும். எனவே அரசு இவர்கள் மீதான விசாரணைகளை துரிதப்படுத்தி அந்த அப்பாவிகளை விடுதலை செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நடைபெறப் போகும் ஆறாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் இச் சிறைக் கைதிகளின் விடுதலை பற்றி ஒரு தீர்க்கமான முடிவெடுத்து அவர்களின் விடுதலையை உறுதிப்படுத்த வேண்டுமென்று விடுதலைப் புலிகளைக் கோருகின்றோம்.

தங்கள் விடுதலையை வலியுறுத்தி ஜனநாயக வரம்புக்குட்பட்டு தமது உயிரைக் கூட துச்சமென மதித்து சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் களுத்துறைச் சிறைக் கைதிகளுக்கு எமது ஆதரவைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம் எனறு குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

---

### புலிகள்...

தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்பது மோசமான மனிதவுரிமை மீறலாகும்.

அரசு பலதடவைகள் கைதிகளின் விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருந்தது.ஆனால் இது வரை எதுவும் நடை பெறவில்லை.

தற்போதைய அரசு தமிழ் மக்களிடையே நம்பிக்கையை கட்டி எழுப்ப வேண்டுமென்றால் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்றும் தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

### வட-கிழக்கு...

ஆனால் அதனை திறைசேரி நிராகரித்து இருந்தது. இந் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான முடிவு நேற்று யாழ்.கல்வி வலயத்தில் கல்வி மேம்பாட்டுப் பேரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

பகிஷ்கரிப்புக்கான ஏற்பாட்டு ஒழுங்குகளை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கமும்,தொண்டராசிரியர் சங்கமும் மேற்கொண்டுள்ளன. (இ-7)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.